Registered as a News Paper பக்கங்கள்: 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 10 (24-01-1992) வெள்ளிக்கிழமை ஓசை: 340

## தற்காலிக ஆசிரியருக்கு நாளைநேர்முகப்பரீட்சை

யாழ். கோட்டக் கல்விப் பிரிவில் தற்காலிக ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட வுள்ளோருக்கான நேர்முகப்பரீட்சைகள் அந்தந்தப்பகுதிக் கொத்தணிமூலாதாரப் பாடசாலைகளில் நாளை காலை 9மணிமுதல் நடைபெறும் என யாழ். கோட்டக்கல்விப் பிரதிக்கல்விப்பணிப்பாளர்வேலாயுதம்அறிவித்துள்ளார். இதன்படி சகல விண்ணப்பதாரிகளும் சகல ஆவணங்களுடனும் சமுகமளித்தல்வேண்டும். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள்வண். வடக்கு கொத்தணியினருக்கு இந்து மகளிர் கல்லூரியிலும், (8 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் திட்டம் சீர்குலைவு

# குழம்பிய நிலையில் சிங்கள அரசு

## புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள் விமான தள குண்டுவெடிப்பின் எதிரொலி

(கொழும்பு)

இப்புத்தாண்டிலிருந்து விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக நடத்தி வரும் துணிகரத் தாக்குதல்களும், அதனால் ஏற்பட்ட பாரிய உயிரிழப்புகளும், சீனன்குடா குண்டுவெடிப்பால் விமானப்படைக்கு ஏற்பட்ட பேரழிவும் சிறிலங்கா அரசின் இராணுவத் திட்டங்களுக்கு பெரியதொரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக தனது போர்முறைத் திட்டங்களை மாற்றியமைக்கும் நிர்ப்பந்தமும் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுக்களுக்கு கதவடைத்துவிட்டு இராணுவ அணுகுமுறைக்கு முதன்மை கொடுத்திருந்த அரசுக்கு இந்த எதிர்பாராத பின்னடைவுகள் பெரும் சிக்கலையும், குழப்பத்தையும் உண்டுபண்ணியுள்ளது.

இம்மாதம் வடக்கிலும், கிழக்கிலும் பல்வேறு அரங்குகளில் புலிப்படை வீரர்கள் நடத்திய துணிகரத் தாக்குதல்கள் காரணமாக 70 க்கும்மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதோடு பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து, தாக்குதல் சக்தியை இழந்துள் (8ஆம் பக்கம் பார்க்க)

## 9 போர் விமானங்கள் சேதம்

திருக்கோணமலை சீனன்குடா விமானப் படைத்தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பின் காரணமாக ஒன்பது விமானங்கள் சேதமடைந்தன என்று விமானப்படை விங் கொமாண்டர் விஜிதா தென்னக்கூன் கூறியுள்ளார். பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில் நான்கு விமானங்கள் முற்றாகவே அழிந்து போயுள்ளதாகவும் தெரிவித்தார்.

## படையெடுப்பு நடந்தால் சமாதானக்கதவு மூடப்படும்

### நல்லெண்ண குழுவிடம் புலிகள்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள கத்தோலிக்க நல்லெண்ண தூதுக் குழுவினர்நேற்று மாலை விடுதலைப் புலிகளைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர். சுமார் இரண்டு மணி நேரம் நடந்த இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசாவும், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கலந்து கொண்டனர். கத்தோலிக்க நல்லெண்ணக் குழுவிற்கு வண. பிதா அலெக்சாண்டர் தலைமை தாங்கினார்.

இச்சந்திப்பின்போது விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை அவர்கள் கேட்டு அறிந்து கொண்டனர். அப்பொழுது சமாதானத்திற்கான கதவை எப்பொழுதும் விடுதலைப்புலிகள் திறந்தே வைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதேவேளை யாழ்: குடாநாட்டின்மீது படை எடுப்பு ஒன்று நடைபெறுமானால் (8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம்மீதுதாக்குதல் இராணுவம் தயார் நிலையில்

### - ஹமில்டன்

(திருக்கோணமலை)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பெரும் எடுப்பிலான தாக்குதல் ஒன்றை நடாத்த இராணுவம் தயாராக இருப்பதாக கூட்டுப்படைகளின் தளபதி ஹமில்டன் வணசிங்கா திருக்கோணமலையில் செய்தியாளரிடம் பேசும்போது கூறி (8ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் புலிகள்;

## அரசாங்கம் பதற்றம்

(பதுளை)

புலிகள் மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளில் ஊடுருவக் கூடும் என்ற புலனாய்வுத் துறை அறிக்கையைத் தொடர்ந்து மலைநாட்டில் பாதுகாப்பு ஒழுங்குகள் பலப்படுத்தப் பட்டுள்ளன. வடக்கில் பாதுகாப்புப் படைகள் தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தால் புலிகள் மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளுக்குள் நுழையக்கூடும் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

மலைநாட்டில் பாதுகாப்பைப் பலப்படுத்திப் பெருந்தோட்டங்களை பாதுகாக்கும்படி பொலிஸ் தலைமைச் (2 ஆம் பக்கம் பார்க்க)

## சீனன்குடா குண்டுவெடிப்பு; விசாரணை நடக்கிறதாம்

(கொழும்பு)

திருக்கோணமலை சீனன் குடா விமானப்படைத் தளத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று சிறிலங்கா பிரதமரும், நிதியமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய டி. பி. விஜயதுங்கா சீனன்குடா வெடிவிபத்துக் குறித்து தெரிவிக்கையி (8ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பலமான விமானக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன் தினம் மாலை அகோரமான குண்டு வீச்சுத் தாக்குதலை சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்டனர். வவுனியா மாவட்டத்திலுள்ள ஈச்சங்குளம் பகுதியிலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதேவேளை கட்டியன் குளம் பகுதியிலும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக ஒருமணி நேரத்திற்கு மேலாக நடத்தப்பட்ட இத் தாக்குதலில் பொதுமக்களின் பல வீடு (8ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மீனவர் இராணுவத்தால் கைது

(குருநகர்)

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை பூநகரி - ஆனைவிழுந்தான் தீவுப் பகுதியில் வைத்து குருநகர் மீனவர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவருடன் சென்ற மற்றொருவர் கடலில் பாய்ந்து துப்பாக்கிச் சூடுகள் மத்தியில் தப்பி வந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

குலசிங்கம் ஹன்யூஸ் (வயது 34) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டவராவார். இவருடன் சென்ற பொன்னுத்துரை ஜெயக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவும், தொண்டாவும் இந்நாட்டு பிரஜைகளே

### -காமினி பொன்சேகா

(கொழும்பு)

பிரபாகரனும் இந்நாட்டின் பிரஜையே. அவரைக் கைது செய்வதானாலும்இந்நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே கைது செய்து விசாரணை நடத்த வேண்டும், நீதி வழங்க வேண்டும் அதைவிடுத்து பிரபாகரனைக் கைது செய்ய இந்தியாவின் உதவியைப் பெறுங்கள் என்று சிலர் வாதிடுவது அர்த்தமற்றதாகும் என்று சிறிலங்கா நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா கூறினார். நேற்று நாடாளுமன்றத்தில் அவசர (8ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானுக்கு வி.பி.கணேசன்ஆலோசனை

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்கு அமைச்சர் தொண்டமான் முன் வைத்த யோசனைகளை எதிர்ப்பவர்கள் மீது ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் வி. பி. கணேசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் பாராளுமன்றத் தெரிவுக்குழு கேட்டுக் கொள்ளாதபட்சத்தில் யாழ்ப்பாணம் விஜயத்தைக் கைவிடுமாறும் தொண்டமானை இக்கட்சியின் தலைவர் கேட்டுள்ளார்.

## அமெரிக்க வானொலி

## புத்தளத்தில் அமைப்பது மீள் பரிசீலனையில்

[கொழும்பு]

புத்தளம் பகுதியில் அமெரிக்க வானொலி அஞ்சல் நிலையம் அமைக்கும் திட்டம் குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என சிறிலங்கா ஜனாதிபதிபிரேமதாசா உறுதி (8ஆம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தானுக்கு உதவும் வாய்ப்பே இனி இல்லை

## - அமெரிக்க தூதுவர்

பாகிஸ்தான் தனது பாதுகாப்புப் படைத்திறனை அதிகரித்துக் கொள்ள வகை செய்யாதபடி உள்ள உதிரிப்பாகங்களை மட்டுமே அமெரிக்கா அனுப்பும் என்று அமெரிக்கா பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அதிகாரிகளின் இந்த அறிவிப்பினை இஸ்லாமாபாத்திலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்தது.

பிரஸ்லர் திருத்தத்தின் கீழ் எப்-16 ரக விமானங்கள் போன்ற இராணுவ சாதனங்களுக்கான உதிரிப்பாகங்களை பாகிஸ்தானுக்கு விற்க முடியாது என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

சட்ட ரீதியிலான முன்னேற்பாடுகளை நிறைவேற்றிய பின்னர் அனுமதிக்கப்பட்ட வேறு சில உதிரிப்பாகங்களை பொதுச் சந்தையிலிருந்து பாகிஸ்தான் வாங்கிக் கொள்ளலாமென்றும்,

ஆனால் இனிவரும் காலத்தில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை மீண்டும் தொடங்குவதற்கான வாய்ப்பே இல்லை என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலியதுணைப்பிரதமர் சீனா விஜயம்

(பீகிங்)

இஸ்ரேலிய துணைப் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான டேவிட்லெவி சீன விஜயம் ஒன்றை மேற்கொண்டு பீகிங் சென்றுள்ளார். சீனாவும்-இஸ்ரேலும் இராஜரீக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவிருப்பதாக அவர் பீகிங் விமான நிலையத்தில் செய்தியாளரிடம் தெரிவித்தார். இஸ்ரேலியத் தலைவர் ஒருவர் சீன விஜயமொன்றை மேற்கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

இதேவேளை இஸ்ரேலிய அரசாங்கம் எதிர்வரும் வாரத்தில் மட்டும் ஐந்து தடவை நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தவேண்டியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் சீனாவும் பங்கு கொள்ளும் என்று சீன வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.


### வரி விளம்பரம்

**A/L இரசாயனம்**

A/L 93 இரசாயனம்; Basic ஆரம்பம்: 25-01-92 சனி 6.30 a.m. ஆசிரியர் சத்தீஸ், 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (2134)


# வல்வையில் இன்று மாபெரும் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டிதுறை பகுதியில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் சிறிலங்கா விமானப் படையினர் அகோரக் குண்டு வீச்சு தாக்குதல் நடத்திய ஓராண்டு நினைவு நாள் இன்று ஆகும்.

இதனை முன்னிட்டு இன்று இரவு 7.30 மணிக்கு வல்வெட்டித்துறை ஆதி கோயிலடியில் மாபெரும்பொதுக்கூட்டம் ஒன்றை மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் பலர் உரையாற்றவுள்ளனர்.

# அகதிமுகாமில் சைக்கிள் திருட்டு

(புங்குடுதீவு)

இடம் பெயர்ந்து யாழ்-கனகரெத்தினம் மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள புங்குடுதீவு வாசி ஒருவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜி நெவில் என்பவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டது. வெளியில் சென்று வந்த இவர் கல்லூரி சைக்கிள் பாதுகாப்பு மண்டபத்தில் நிறுத்தி வைத்திருந்த போதே அவரது(றலி)சைக்கிள் திருடப்பட்டது.

# எறிகணைவீச்சு

(குருநகர்)

நேற்று (23. 1. 92) மாலை 6.15 மணியளவில் மண்டைதீவு ஸ்ரீலங்கா ராணுவ முகாமில் இருந்து யாழ்நகரக் கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்செய்தி எழுதப்படும் வரை சேத விபரங்களும், மேலதிக விபரங்களும் கிடைக்கவில்லை (21)

## மலையகத்தில்

செயலகம் மலைநாட்டுப் பொலிஸ் நிலையங்களைப் பணித்துள்ளது. வெளியார்களைத் தோட்ட லயன்களில் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக்கூடாது என்றும் பொலிஸ் தோட்டத் தொழிலாளர்களை எச்சரித்துள்ளது.

பொலிஸ் ரோந்து தீவிரப்படுத்தப் பட்டிருப்பதுடன் மலைநாட்டின் பல பகுதிகளில் பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.


பதுளை, நுவரெலியாப் பகுதிகளிலும், சப்ரகமுவ மாகாணத்தில் தோட்டத் தொழிலாளர் செறிவாக வாழும் பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தை இராணுவம் தாக்கும்போது புலிகள் மலைநாட்டுக்குள் நுழைவதன் மூலம் படைகளின் கவனத்தை யாழ்ப்பாணத்திலிருந்து மலைநாட்டுக்குத் திருப்பலாம் என்று புலிகள் உத்தேசித்திருப்பதாக புலனாய்வு அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

---

# ஓராண்டு நினைவஞ்சலி

''மாய்ந்தனையோ நீறெனவே''



| மண்ணிலே உறுதியாய் மலர்ந்தது | மண்ணிலே குருதியாய் நனைந்தது |
|---|---|
| 13 -- 02 -- 1962 | 04 -- 02 -- 1991 |

## அமரர் வி. கருணாகரன்

அமரரின் ஆத்ம சாந்தியை வேண்டி நினைவு கூரும்
அன்பின் அன்னை தந்தை,
ஆருயிர் உடன் பிறப்புக்கள்
உற்றார், உறவினர் நண்பர்கள்,
உயிரான மனைவி, பிள்ளை.

மில்லையான்,
மல்லாகம்.
(2130)

---

# ஆண் தட்டெழுத்தாளர் தேவை

தமிழ் (ஆங்கிலம் தெரிந்த) தட்டெழுத்தாளர்தேவை. அநுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சான்றிதழ்களுடன் (26-01-92) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் ஈழநாதம், 31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் சமுகம் அளிக்கவும்

(2135)

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை

ஊனமுற்றோருக்கான

# தொழில் பயிற்சி

கண், காது, கை, கால் ஆகியவற்றில் குறைபாடு உள்ளவர்களுக்கும் தொழில் பயிற்சியளித்து அவர்களை தாமே தங்களில் தங்கி வாழக்கூடிய வழியை உருவாக்கும் பொருட்டு ஒரு கலந்துரையாடல் எமது பணிமனையில் 26-01-92 பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி குறைபாடுகள் உள்ளோர் வருகைதந்து தாங்கள் விரும்பும் தொழில் பயிற்சிமுறைகளை முன்வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தொழில் பயிற்சிகள் 03-02-92 இல் ஆரம்பிக்கப்படும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
22-01-92.

கௌரவ செயலாளர்

(சி/ 3839)

---


**O/L**

க. பொ. த. சாதாரண தரம்

## (ஆண்டு 11)

- பகல் முழுநேர வகுப்புகள்
- சனி, ஞாயிறு வகுப்புகள்
- மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்

**25-1-92** சனி காலை 7-45 மணி

# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இதைவிடத் தெரிவு .......
வேறேதும் இல்லை! (சி/3821)

---

எவர்சில்வர், பிளாஸ்ரிக், அலுமினிய
கண்ணாடிப் பாத்திரங்கள்
பளிச்செனத் துலங்கிட

வேம்பின் ஆதாரம் கொண்டு தயாரிக்கப்பட்ட

# நீம்

உள்ளூர் மூலவளம் கொண்ட உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு நல்குங்கள்,

மற்றுமோர் **மில்க்வைற் உற்பத்தி**

எழிலகம், உதயம் பல்பொருள் அங்காடி மற்றும் கடைகளிலும் விற்பனையாகின்றது. (சி-3831)


---

# நினைவு கூருகின்றோம்...

## 1992 - 01 - 24

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவுக் கடலில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எம்மைப் பிரிந்த -

**லெப். பாண்டி** [ தர்மகுலசிங்கம் - திரியாய், திருக்கோணமலை ]

**ஒஸ்நெஸ்** [ மா. சிவராசா - திருக்கோணமலை ]

வவுனியா வேலன்குளப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**2ஆம் லெப். நேசன்** [ செல்லத்துரை பரமநாதன் - 2ஆம் படிவம், பாவற்குளம் ]

ஒட்டிசுட்டானில் முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த -

★ **ரஞ்சித்** [ சிவபாதம் சிறிகாந்தன் - மானருவி)

1991ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாம் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**மேஜர் மக்கன்றோ** [ சதாசிவம் புலேந்திரன் - கனகராயன்குளம், வவுனியா]

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3836)

"இது தான் என்ரை கடைசிச் சண்டையாய் இருக்கலாம்" இப்படிக் கூறிவிட்டு என்னைத் திரும்பிப் பார்த்தான் ஈழவன். அந்தப்பார்வையில்அச்சத்தைக்காணவில்லை. விடுதலைப் புலிகளிடம் மட்டுமே காணமுடிந்த -களத்தில் தோன்றும் புன்னகை தான் இருந்தது. காசி அண்ணாவின் 'பத்துத் தடவை பாடை வராது'' என்ற கவிதையில் உள்ள.


''செத்து மடிதல்
ஒரேயொரு முறைதான்
சிரித்துக் கொண்டே
செருக்களம் வாடா''

என்ற வரிகள் தான் ஞாபகத்துக்கு வந்தன. அந்தக் கணத்தில் தனது சாவு நிகழ்வதற்குள் எப்படியெப்படி எதிரி தரப்பில் மிகக்கூடியளவு சேதத்தை விளைவிக்கலாம்? என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது.

ஆனையிறவுத் தாக்குதலுக்குத் திட்டமிடும்போதே வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் மிகப்பெரும் போர்மூளும் என்பது எமக்குத் தெரியும். கடல்வழியால் தரையிறங்கக்காத்திருக்கும் சிறிலங்காப் படைகளுக்கு''இது உங்களுக்குச்சொந்தமானநிலமல்ல உங்கள் இஷ்டப்படி கால் வைக்க'' என்ற செய்தியைச் சொல்லக் காத்திருந்தபோதே ஈழவன் 'இது தான் என்ரை கடைசிச் சண்டையாய் இருக்கலாம்' என்று கூறினான்.

என்னையும் ஈழவனையும் தவிர்ந்த மற்ற எல்லோரும் சடலையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்அவர்கள் கவனமெல்லாம் அங்கேதான். ஈழவனின்கூற்றுக்கு நான்பதில் சொல்லாமலிருக்கும்போது மீண்டும் சிரித்தபடியே அவன் தொடர்ந்தான் ''மச்சான் உவன் சிங்களவன்ரை மோட்டுத்தனமான நடவடிக்கையைப்பார்க்கஎனக்கு மகாபாரதக் கதை தான் ஞாபகத்துக்கு வருகுது... அந்தக் கதையில பாண்டவருக்கு எதையும் குடுக்க கௌரவர்கள் தயாரா இருக்கேல்ல. எந்தத்தூதுக்கும் அவன் மசியேல்ல. நாடுகேட்டு, ஊர்கேட்டு, ஐந்துவீடு கேட்டு, கடைசியாக இருக்க ஒருவீடு கேட்ட போதும் துரியோதனனுக்கு அதைக் குடுக்க மனம் வரயில்ல. ஒரு ஊசிமுனைநிலம் கூட தரமாட்டன் எண்டிட்டான். அதாலகடைசியிலபோர் செய்தேபாண்டவர்கள் தங்களுடைய நிலத்தைப் பெற்றிச்சினம். அதுபோலத்தான் இப்ப எங்கட நிலைமையும் - எங்கட மூந்திய ஆக்களின்ரை தவறால எங்கட நிலமும் சுதந்திரமும் பறிபோன நிலையிலஇப்பநாங்கள் நடுத்தெருவில அகதிகளாக நாடுவிட்டு நாடு தாண்டி ஓடி.. சீ... இதனைச்சொல்லும் போது வேதனையின் தாக்கம் அவனுக்கு...

நான்ஒன்றும் பேசவில்லை. அவன் சொல்வதையே கேட்டுக்கொண்டிருக்கிறேன். நான் இவனை நன்றாகப்புரிந்தவன். இதையெல்லாம் இவன் சொல்லும்போதுஎனக்கு ஒருசம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அன்றொரு நாள் பிறபகல் வேளை



-காவல்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான் இவன்-திடீரெனஎதையோ உற்றுப்பார்த்தான். ''இந்தா மச்சான்! இதைப்பிடி'' -ஏ.கே.யை என்னிடம் திணித்துவிட்டு 'என்ரை அம்மா வாறா நான் ஒளியப் போறன். அவ கேட்டா நான் இல்லை வெளியில போட்டன் எண்டு சொல்லு''என்றுவிட்டு ஓடி ஒளிந்து கொண்டான். இவன் அப்படி ஒளிவதற்கு பல காரணங்கள்உண்டு. அந்தமுகாமில் தமிழீழத்தில் எல்லாத் திசைகளிலும் உள்ளபோராளிகள் இருக்கின்றார்கள். அவர்களில் கணிசமானோர் தாய் தந்தையரைப் பார்க்கும் வாய்ப்பு இல்லாதவர்கள்.

தமது தாய், தந்தையர் எந்த அகதி முகாமில் இருக்கின்றார்கள் என்றோ-ஏன் உயிரோடு தான் இருக்கின்றார்கள் என்றோ தெரியாதவர்கள். இவர்களோடு இருக்கும் தான் மட்டும் பெற்றோரைச் சந்தித்து-மகிழ்ந்து கொண்டிருக்க இவன்மனம் ஒப்பவில்லை. அதனால் அப்படியான சந்திப்பை இவன் தவிர்க்க விரும்பினான்- இதை விடவும் பெற்றோரைச் சந்திப்பதால் இன்னொரு சங்கடம் ஏற்படும் என நினைத்தான்-அது பெரும்பாலும் வட பகுதிப் போராளிகளுக்கு மட்டுமேயுள்ள சங்கடம்- சொந்த நாட்டிலிருந்து பெற்றோரால் அகதி என்ற முத்திரையுடன் துரத்தப்படுவது-அதுவும் போராட்டத்தின் பெயரால்.

தாயார் எமது முகாம்வாசலையடைந்தார். திணிக்கப்பட்ட காவல் கடமையில் இருந்த என்னிடம்தான் நேரேவந்தார். வண்ணார் பண்ணையிலிருந்து அந்தமுகாம்வரை வந்து சேரத்தான்பட்ட சிரமத்தைச் சொன்னார். அவரது தோற்றமே அவரது களைப்பை உறுதிப்படுத்திற்று-'ஈழவனை ஒருக்காப் பார்க்கவேணும்' இந்த வார்த்தைகள் திரும்பத்திரும்ப ஒலித்தன. எனது கண்கள்



ஈழவன்

அவன் ஒளித்திருந்த இடம் நோக்கித்திரும்பின- ''இல்லையெண்டு சொல்லு'' அவனது சைகை சொல்லுகிறது. எனக்கு மனம் கேட்கவில்லை அவனது தாயினுள் எனது தாயைக்கண்டேன். ''இருங்கோம்மா''-ஈழவனின் விருப்பத்துக்குமாறான வார்த்தைகள்என்னிடமிருந்து ஒலித்தன.

உள்ளே சென்றநான் சிலநிமிடச்சண்டையின்பின் வலுக்கட்டாயமாக அவனை அனுப்பினேன். தயங்கித்தயங்கிச் சென்றான் அவன்.

அருகே வந்த மகனைக்கட்டியணைத்து முத்தமிட்டு தன் தவிப்பையெல்லாம் தீர்த்தார் தாயார். வழக்கமான உரையாடல்களுக்குப் பின் ''இந்தியன் ஆமி தான் போட்டாங்களே அப்பன். நீ இயக்கத்தை விட்டு வாவன். உன்ரைமூண்டு அண்ணன்மாரையும்வெளியில அனுப்பிப்போட்டன். நீ வந்து வீட்டை இரன்''-இவன்விரும்பாத வார்த்தைகள் தாயிடமிருந்து வந்ததும் எரிமலையானான் ''நீங்கள் இப்படிக்கேப்பீங்களெண்டால் நான் உங்களைச் சந்திக்க வந்திருக்கமாட்டன். தாயை, தகப்பனை, சகோதரத்தை இழந்த எத்தினை போராளிகளுக்கு மத்தியில இருந்துஉங்களைச்சந்திக்க வந்திருக்கிறேன். உங்கடை மகனோடு இருந்துசெத்துப்போன பொடியளை நினைச்சுப்பாருங்கோ; அவங்களுக்கு எல்லாருக்கும் தாய், தகப்பன், சகோதரங்கள் வெளிநாட்டிலயா? அவங்களால தங்கட சொந்தம் பாசம் எண்டுஇருக்கேலாதா?- இல்லாட்டி அவங்களாலவெளிநாடு போகமுடியாதா? ஆரோ போராடிக்கொண்டிருக்கபோராட்டத்தின்ரை பெயரால வெளிநாட்டில போய்அகதியெண்டு திரியிற வாழ்க்கைக்காகவே என்னை வரச்சொல்லிக்கேக்கிறீங்கள்?...' தொடர்ந்து பொரிந்து தள்ளுகிறான். தாய் பேசாமல்நிற்கிறார். கண்ணீர் மட்டும் கட்டுக்கடங்காமல் பாய்கிறது. ஒரு கணம் தனதுபேச்சை நிறுத்தியஅவன் ''அம்மா.. நான்வாழ்ந்தாலும் தமிழ்மண் செத்தாலும் தமிழ் மண்'' என்று சொன்னான். அவ்வார்த்தைகள் உணர்ச்சியில் தோய்ந்துஒலித்தன. நான் மெய்சிலிர்த்து நின்றேன். புகலிடமற்ற அகதிகள் மேல் கொண்ட பாசத்தால் பொருளாதார அகதிகள் மீது பாயும் அவனதுகோபம் நியாயமாகத் தான் தெரிந்தது எனக்கு.

இப்படியான குணங்கள் தான் அவனைப்போராளியாக்கின, அவனை இரவு பகல் என பாராது உழைக்க வைத்தது. வெற்றிலைக் கேணிக் கடற் கரையில் அவன் என்னோடு பேசிக்கொண்டிருக்கையில்இவ்வாறான சிந்தனைகளே என்னுள் ஓடிக்கொண்டிருந்தன. அவன் பேசிக்கொண்டிருந்தான்-நான் அவனதுஇயல்பை ரசித்துக்கொண்டிருந்தேன்.

இந் நிலையில் நாம் எதிர்பார்த்த அந்தச்சண்டை மிகச் சில நாட்களுக்குள் தொடங்கி விட்டது. ஊண், உறக்கம் அனைத்தையும் மறந்த சண்டை அது- தாகம் மட்டும் எமக்கிருந்தது. அது தமிழீழத் தாயகம் பற்றியது.

''ஆகாயம்- கடல்- வெளி'' பெயரிலேயே அதன் தன்மையை வெளிப்படுத்தும் அப்போரில் புயல் வேகத்தில் பதியத்துடித்த சிங்களப் படைகளின் கால்கள் நத்தை வேகத்தில் ஊர்ந்தன. பல சமயத்தில் பின்னோக்கியும் சென்றன. பாலைவனப்போர்என வர்ணிக்கப்பட்ட இப்போரில் எஞ்சியிருந்த மரங்கள், வீடுகள் அனைத்துமே சேதமாகி விட்டன - சேதமாகாதது எமது உறுதி மட்டுமே.

ஒரு திசையால் ஈழவனின் குழுவை நெருங்கியது சிங்கள இராணுவம்- அந்த நிலையில் இரு படையினரதும் எண்ணிக்கைமலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தில் இருந்தது-எதிரியின் வியூகத்தினுள் ஈழவனின் படைகள் சிக்கிவிட்டன. உமிழ்ந்து கொண்டிருந்த ரவைகளின் இடைவெளி அங்குலக் கணக்கில் கூட இல்லை. வேட்டொலிகளையும் விமானக் குண்டு வீச்சையும் தவிர வேறெந்தச் சத்தமுமில்லை. எப்படியோ வீரச்சாவடைந்தவர்களைத் தவிர காயமடைந்தவர்கள் மீட்டெடுக்கப்படுகின்றனர். இந் நிலையிலும் போர்க்களத்தை விட்டு பின்வாங்க இவன் மனம் ஒப்பவில்லை. ஒரு கட்டத்தில் தனியனாகவே களத்தில் நிற்க வேண்டியிருந்தது. 'விடாதேங்கோ, விடாதேங்கோ'' இது தான் அவனது இறுதிவாக்கியங்கள்-இதுதான்நாம்அவனைத் தொலைத்த வரலாறு.

அடிக்கடி மகாபாரதக் கதைகளை ஞாபகப் படுத்திப் பேசும் ஈழவன் மகாபாரதப் போரில் இப்படித்தான் அபிமன்யுவை சுற்றி வளைத்தனர் என்பதை மறந்து விட்டான். அதனால் மாவீரர் மயானத்தில் இவனது பெயரைச்சுமந்தபடி ஒருகல் எழுந்து நிற்கிறது.

- நாவலன்

# ஈழத்தமிழர் அவலம்: இந்தியத் தமிழர் பாராமுகம்

''அனுமனும் அமைதிப் படையும் எரித்தது போக மிஞ்சியதை சிங்களப்படை எரிக்கிறது. கொலையும் கற்பழிப்பும் செய்திகளாகின்றன. காரணம் புலிகள் என்று அரசியல் வாதிகளும். அக்கிரகாரத்துக்காரர்களும் சேர்ந்து இசை பாடுகிறார்கள்.''

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் 'மண்' சஞ்சிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. இச் சஞ்சிகையில் தமிழீழத்தில் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பு தொடங்கியதற்கு பிறகும், தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு பின்பும் இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது:

காரணம் யார் என்றாலும் அழிவது தமிழர்கள், தமிழினம். சிங்கள, தமிழக, இந்திய அரசியல் வணிகர்கள் எப்படியெல்லாம் 'ராஜ தந்திர'மாக ஒருவரையொருவர் தாக்கியும், தாங்கியும் பேசினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும் நாடகம்தான்.

எதிர்க்கட்சி இல்லாத தமிழகத்தில் பார்ப்பனப் பத்திரிகைகளின் ஆட்டம் பேயாட்டம். காரணம் பயம். தமிழன் தனக்கென்று ஒரு நிலம் - தமிழீழம் பெற்றுவிட்டால், அதன் தாக்கம் தமிழகத்திலும் வந்து விடுமே, வந்தால் பிழைப்புக் கெட்டு விடுமே என்பதுதான். அது ஒரு தேவையற்ற அச்சம்.

ஒவ்வொரு வீட்டிலும் தாயும், மகளும் கற்பழிக்கப்பட்டு வயது வந்த மக்கள் கொலை செய்யப்பட்டு வேறு வழியே இல்லை என்ற நிலையில் ஈழத்தமிழர்கள் ஒரு பொது எதிரியை எதிர்த்து ஆயுதப் போர் செய்யும் பொழுதே அங்கு பல குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் ஆட்சி புரிகிறது என்றால் ஆயிரம் சாதிகளாகப் பிளவுண்டு சிதறிய தமிழக மக்கள் இன்று புதிதாக மதத்தின் பேராலும் மண்டை உடைத்துச் சிதறுகிறார்கள்.

'கண்ணுக்கெட்டிய தூரத்தில்' சொந்தச் சகோதரர்கள் சாகக் கண்டும் வெற்றி பெறுவது இத்தாலியா ஜெர்மனியா என்ற கவலைதான் நமக்கு. பெரியார் பக்தர்கள் சந்நிதானங்களாகி விட்டார்கள். ஆட்சித் தலைமையின் ஆலோசகர்கள் பார்வை நாற்காலி மேல். மீந்துபோன திராவிட தமிழ் மானச் சிங்கங்கள் போயஸ் பாப்பாத்தியின் கைப்பாவைகளாகி விட்டார்கள். வழக்கமான தேசியக் கழுதைகளுடன் புதிதாக பாரதீய ஜனதாக்கட்சி என்ற இந்துக் கழுதையும் சேர்ந்து உதைக்கிறது தமிழினத்தை.

எனவே பார்ப்பனர்களே! இவர்கள் எல்லாம் சேர்ந்து போராடி தமிழன் மறுமலர்ச்சிக்காக தனிநாடு பெறுவார்கள்; உங்கள் வாழ்வு பறிபோகும் என்று அஞ்சாதீர். நீங்கள் விதைத்த நச்சு விதைகள் இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து தமிழனை மூளையற்றவனாக்கி விட்டது. உணர்வற்ற அவன் கழுத்தை இந்த நல்ல நேரத்தில் இந்து மதம் என்ற வாள் கொண்டு வெட்டிச் சாய்த்து விட வேண்டியதுதான் மீதி. பின்னர் 'சோ'தான் தமிழக முதல்வர்.

எனவே தமிழ் முண்டங்களைத் தலைவர்களாக்கி மாவட்டம், சாலை பெயர் மாற்றத்திலிருந்து தொடங்கி பின்னாலிருந்து உங்கள் வியூகங்களைக் கட்டுங்கள். தேவையற்ற பதற்றம் விடுங்கள். நிதானமாக முன்னேறுங்கள் முதலில் அச்சந் தவிர்!

## உலக மொழிகள்

உலகமொழிகளில் நூறு மில்லியன் மக்களுக்கு மேல் பேசும் மொழிகளாக பன்னிரண்டு மட்டுமே உள்ளன. இவற்றைவிட ஐம்பது மில்லியன் மக்களுக்கு மேல் பேசும் பதினொரு மொழிகள் மட்டுமே உள்ளன.

மிகக் கூடிய மக்களால் பேசப்படும் மொழியாக மாண்டாறின் சைனீஸ் (Mandarine Chines) விளங்குகின்றது. இதனை 864 மில்லியன் மக்கள் பேசுகின்றனர். இரண்டாவது இடத்தை ஆங்கிலமும் மூன்றாவது இடத்தை ஹிந்தியும் வகிக்கின்றன.

இந்த வகையில் தமிழ்மொழி பதினேழாவது இடத்தை வகிக்கிறது. இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் மொத்தம் 65 மில்லியன் மக்கள் தமிழை தாய்மொழியாகக் கொள்கின்றனர்.

## களத்திலும் காற்றிலும்

அந்தத் தம்பிகள் எங்கே?
நூறு புன்முறுவலைத்
தொடுத்த சரங்களாய்
நுரைகள் ஒதுங்கும்
கடலின் கரையில்..

சுவடு ஒவ்வொன்றும்
அலைகளில் மறைகையில்

தொடுவானும் கடலும்
தொடுகின்ற வளைவைக்
கண்களால் துழாவிக்
கணநேரம் கழித்து
என்னைப் பார்த்து
என் துணைவி கேட்டாள்;

''அந்தத் தம்பிகள் எங்கே?''
' தம்பிகள் என்றால்...''

''அவர்கள் தாம்..
அக்கா என்ற சொல்
வாயெல்லாம் நிறைய
அடிககடி நமது
வீட்டுக்கு வந்து
புதிதாய் வந்த புத்தகங்களையெல்லாம்
ஒன்று விடாமல் வாங்கிச் செல்வார்களே
அவர்கள்...

கண்களில் விடுதலைக் கனவுகளோடும்
கழுத்தில் சயனைட் குப்பிகளோடும்
வந்து செல்வார்களே
புலிகள்...

அந்தத் தமபிகள்
இப்போது
ஏன் வரக் காணோம்?''

அந்த முகங்களை நானும் அறிவேன்,

கறுப்பாய், மாநிறமாய்
எலுமிச்சை மஞ்சளாய்
இபபடி —
மானுட வண்ணங்கள் அனைத்திலும்
இன்னும்
மறைந்தறியாத புன்முறுவல்களோடும்..
அந்த முகங்களை
நானும் அறிவேன்!

நெஞ்சிலிருந்து வந்த 'அக்கா' என்ற சொல்
துணைவிக்கு
அன்புத் தம்பிகளாய் நிறுத்தும்,
சுடர் விழி நிமிர்த்திச் சொன்ன சூள்கள்
என்
நினைவுக்குச் சூடேற்றும் தோழர்களாய்
உயர்த்தும்.
வந்து செல்லும் நாள்களின் நிமிடங்கள்
எங்கள் இல்லமெங்கும் மின்னல்கள்!
அந்தத் தம்பிகள் எங்கே?

மாலைச் சூரியக்
கதிர்களில் மின்னி
நொறுங்கும் வெள்ளை
நுரை ஒவ்வொன்றிலும்
அவர்களின புன்னகை
அவர்களின் ஒளிமுகம்
தொடுவானுக்கப்பால்
தொடரும் கடலின்
அக்கரை மண்ணில்
அவர்களின் சுவடுகள்
அலைகளின் கைகள்
வாரிப் போகவும்
காற்றின் பயணத்தில்
கலந்து கொள்ளவும்....

உரிமையை நேசிக்கும்
ஒவ்வொரு முகத்திலும்
உயிரின் மூச்சாய்
உறவு கொள்ளவும்...

அந்தத் தம்பிகள்..
இனியும் நீளும் விடுதலைப் போரை
எழுதும் குருதி மைக்கூடாய் நடக்கலாம்...
அவர்கள் நடந்த குருதித் தடங்களில்
அன்புத் தங்கையர் அணிவகுக்கலாம்.

அசோகச் சக்கரங்களால்
துவைக்கப்பட்ட
இல்லங்கள் மீண்டும்
எழுந்து நிற்கையில்
புதிதாய் நடப்படும்
பூச் செடிகளோடு
விடுதலைக் கொடியும்
சேர்ந்து துளிர்க்கும்.
அந்தக் கொடிகள்
காற்றில் அசைகையில்
அவர்களின் புன்னகை
விழிகளை நிறைக்கும்.

இனியும் அந்தத் தம்பிகள் இருந்தால்
மானுட வண்ணங்கள் அனைத்திலும்
மறைந்தறியாத புன்னகையோடு
களத்தில் நிற்பார்கள்..
இல்லையேல்
நாம் உயிர்க்கும்
காற்றில் இருப்பார்கள்.

— இன்குலாப்

குறிப்பு:- தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடைந்த காலகட்டத்தில கவிஞர் இன்குலாப் அவர்களால் இக்கவிதை எழுதப் பட்டது. 'மண்' சஞ்சிகையில் இக்கவிதை பிரசுரமானது.

## சிறுகதை

# பாதையும் பயணமும்

### மணலாறு விஜயன்

அடிவானில் கருமேகத் துண்டுகள். அவை சுற்றிச் சுழன்று மூறுக்கெடுத்தன. அணிசேர்ந்தன.

பிளாஸ்ரிக் படகின் அணியத்தில் ஏறிஅமர்ந்திருந்தேன். தொடுவானின் நிகழ்வுகள் நன்றாக இல்லை. நெடுந்தூரப் பயணம், கருமேகங்கள் அழுதுவிட்டால்...

விரைவாகச்சென்றால் ஊரியானைக் கடந்து விடலாம். மனம் விரைவாக இருந்தது. ஆனால், படகுதான் இன்னும் புறப்படுவதாக இல்லை

ஒன்றரை மணித்தியாலம் சறுக்கீஸ் நடை, இரண்டு மணி நேரம் தண்ணீரில் வத்தையில் நதைப்பவனி. நினைத்தால் சுவையாகவும் இருக்கிறது; துயரமாகவுமிருக்கிறது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தபோது நடந்தவைகள், கண்டவைகள் கேட்டவைகள் எல்லாம் நினைவுக்கு வந்தன.

அந்தப் பெண்ணுக்கு நாற்பது வயது மதிக்கலாம். உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தாள். முனகல், அனுக்கம் எல்லாம் இதை எடுத்துக் காட்டின. படகின் அணியத்துக்கு கீழ் அவளை மெதுவாகத்தூக்கிகிடத்தினார்கள்.

அவசர சிகிச்சைக்காக. யாழ். மத்திய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் படுகிறாள்.

'அண்ணோய்! எத்தின சைக்கிள் போடுறது'

படகில் அவசரமாக ஏறநிற்கும் பயணிகளின் கேள்வி இது.

'ஒரு மோட்டச் சைக்கிளும் பத்துச் சைக்கிளும் போடுங்கோ' சொல்லி முடிப்பதற்குள் எல்லாச் சைக்கிள்களும் ஏற்றப்பட்டுவிட்டன எனது மோட்டார்சைக்கிளுக்கு மேல் பத்து சைக்கிள்களும் சாத்தப் பட்டுக்கிடந்தன.

அணியத்துக்குகீழ் கிடத்தப் பட்ட அவசர நோயாளி சைக்கிள்கள் அவளை மறைந்திருந்தது. அனுங்கும் சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

படகு இங்கே ஓடுவதில்லை, தள்ளப்படுகிறது கழுத்தளவு நீரில் மெதுவாக தள்ளிக் கொண்டிருந்தான் ஒரு இளைஞன். படகு ஊர்ந்தது ஒன்றன்பின் ஒன்றாக அவசரமான உலகை சுமந்துகொண்டு எத்தனைபடகுகள்..

'மனிசன மனிசன் ஏச்சுப் பிழைச்ச காலம் போய் இப்ப மனிசன மனிசன் ஏத்திப் பிழைக்கிற காலம் வந்திட்டுது'

படகில் இருந்த ஒருவரின் நகைச்சுவைப்பேச்சு இது.

'எங்கட படகு நல்ல வேகமாய்ப் போகுது ஏனெண்டா மற்றப் படகெல்ல த்தையும் விலத்திக்கொண்டு போகாமல் விலத்த விட்டுக் கொண்டு போகுது'

இது இன்னுமொருவரின் சிரிப்புக்கதை.

மாலை 6-30 மணியாகிவிட்டது. 5-30க்கு வெளிக்கிட்ட படகு இப்போது நடுத்தண்ணீரில் நின்றுகொண்டிருந்தது இன்னும் சரிபாதித் தூரம் போகவேணும்.

அம்பியூலன்ஸ் நோயாளியின் முனகல் அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் அதை யாரும் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.

படகு தள்ளும் இளைஞனை திரும்பிப் பார்க்கிறேன். 'மாலை நேரம் பனிக்குளிரை அள்ளிவரும் மெல்லிய காற்று, போதாக்குறைக்கு தண்ணீரிலும் பட்டுத்தெறித்து.

குளிருக்கு உடம்பு விறைக்காதா? பாவம், இரண்டு மணி நேரம் எப்படி சேற்றுக்குள் புதைந்து புதைந்து படகைத் தள்ளுகின்றான்.

இருபதுக்கு மேற்பட்டவர்கள் படகில் இருக்கிறார்கள். எவருக்கும் அந்த இளைஞனுக்கு உதவிகொடுத்து தள்ள மனமில்லை.

'தம்பி பறவாயில்லாமல் தள்ளுறான்; எப்பிடியும் விடியக்கிடேல வீட்டுக்குப் போயிடலாம்.'

வயதுபோன முதியவர் ஒருவரின் ஆற்றாமையின் நகைச்சுவை வெளிப்பாடு இது.

'பகல்லையே பள்ளம்வழிய தடக்குப்பட்டு விழுறனான்; சைக்கிளுக்கும் லயிற்று இல்ல; உந்த சோக்கான பாதையால எப்படித்தான் சாவகச்சேரிக்கு போய்ச் சேரப்போறனோ தெரியாது.'

எல்லோரும் கலீரெனச்சிரித்தார்கள். ஓய்வு பெற்ற ஒரு தபால் அதிபர் அவர். சூ பிவிட்ட பனங்கொட்டை போலிருந்த அவருடைய தலையைப் பார்த்தாலே சிரிப்பு வரும்.

'ஏன் தம்பி, இப்ப எல்லாற்ற சாதகத்திலேயும் கப்பலேறு நோக்கு பலன் இருக்குது; கடல் கடந்த பயணத்துக்கும் பலன் இருக்கெண்டு எழுதிக் கிடக்குது. அது உண்மையாத் தான் கிடக்குது.'

மீண்டும் அவரது நகைச் சுவைப் பேச்சைக் கேட்டு அனைவரும் சிரித்தார்கள்.

இரவு மெல்ல சூழ்வதை கடிகாரம் காட்டியது. நேரம் 7-00 மணி.

'முசுலீங்கள் இண்டைக்கு மூண்டாம் பிறையெண்டு சொலலுறாங்கள், கொழும்பு கோல்பேசில நிண்டு பார்த்தால் தெரியுமாம்' என்று ஒரு வயோதிபர் கூற —

'நாங்கள் இப்ப போய்க் கொண்டிருக்கிற இடமும் கோல்பேஸ்மாதிரித்தான். ஏன் எங்களுக்குதெரியுதில்ல' என்று மற்றவரிடமிருந்து பதில் வர ஒரே நகைச்சுவையாக இருந்தது.

எனக்கு அருகாமையில் சர்க்கரைப் பூசணிக்காய் மாதிரி அமர்ந்திருந்தவரைப் பார்த்தேன். பாதையில் அவருக்கு நடந்ததை நினைக்க சிரிப்புச் சிரிபபாக வந்தது.

ரெண்டு சப்பாத்தையும் கழட்டி கையில தூக்கிப் பிடிச்சுக்கொண்டு கொழும்புப் பையினையும் தோளில கொழுவிக்கொண்டு ஐம்பது யார் தூரம்தான் வந்திருப்பார்.

'தம்பி இன்னும் கனதூரம் போகோணுமோ? இதைவிட கஸ்ரமான பாதையும் இனி வருமோ?' அருகில்வந்தவர்,

'என்னய்யா, இனித்தான் கஸ்ரமே இருக்குது; காச்சட்டையைக் கழட்டி பையில திணியுங்கோ. சாறமிருந்தால் கட்டிக்கொள்ளுறது நலலது'

'இன்னும் கன தூரமோ?' அடுத்த கேள்வியையும் அவரே கேட்டார்.

'இன்னும் ஒண்டரை மணித்தியாலம் நடக்கோணும் பாருங்கோ' அருகில் வந்தவர் பதில் கூறி முடிக்கு முன்னர்.

மளார்....என்றொரு சத்தம். வயல் வரம்பில் சறுக்குப் பட்டு குப்புற வீழ்ந்தார் அந்தப் பெரியவர்.

'என்னய்யா, சேத்துக்குள்ள துளாவுறியள்' எனக்கேட்டேன்.

'சப்பாத்து ரெண்டையும் காணேல்லபபாருங்கோ'

சேத்துக்குள்மறைந்துபோன சப்பாத்தை தேடினார். சர்க்கரைப் பூசணிக்காய் போன்ற அவரது மேனி விநோத உடைப் போட்டிக்கு உடுப்புப் போட்டதுபோல இருந்தது.

சிரிக்கவும் முடியாது; சிரிச்சால் எமக்கும் இந்தக்கதி தான்.

எங்களையும் விலத்திக் கொண்டு அவசர அவசரமாக ஒரு குழுவினர் சென்றுகொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில சண்டை தொடங்கமுதல் கொழும்பு போய்ச்சேரவேண்டுமென்ற அவசரம் அவர்களின் நடையில் தெரிந்தது.

உழவியந்திரங்கள் சென்ற தடங்களில் சேறு கூழாக நின்றது. தடம்வழியே மிக நிதானமாக கால் பதிக்கத்தவறினால் சேற்றில் விழுவதைத்தவிர்க்க முடியாது.

'ஐயோ அம்மா என்னப் பிடிச்சு இழுங்கோ' முன்னே சென்ற கொழும்புப்பயணிகளில் ஒரு பெண் இடுப்பளவு சேற்றில் புதைந்து நின்றாள். இருவர் அவள் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தனர்,

'அக்கா, வாக்கினை தூக்கிக்கொண்டுவந்து தரட்டுமா; நூறுரூபாய்தந்தால் காணும்' சேத்துக்குள் கிடந்த பெண்ணின் பயணப்பையை இருவர் இழுத்துக்கொண்டிருந்தனர்.

''அண்ணேய், மோட்டச் சைக்கிளை தூக்கிக் கொண்டந்து தாறம், அறுநூறு ருபா தந்தால் காணும்: தாருங்கோண்ண; தாருங்கோண்ண'' என்று எனது மோட்டார் சைக்கிளை மறித்து நால்வர் நின்றனர்.

மனிதர்களைச் சுமக்கும் மோட்டார் சைக்கிளை இன்று மனிதர்கள் சுமந்து சம்பாதிக்கிறார்கள்.

இரண்டு சைக்கிள்களின் கரியரில் ஒரு மோட்டார் சைக்கிளை ஏத்திக் கொண்டு நால்வர் போய்க் கொண்டிருந்தனர்.

முன்பக்கம் வானத்தைப் பார்க்க புதைந்த நிலையில் ஒரு உழவியந்திரம் நின்றது. பெட்டிக்குள் கிடந்த எண்ணெய் பெரலுடன் ஐந்து ஆறு பேர் மாலி பாய்ந்துகொண்டு நின்றனர்.

ஏத்திப் பிழைப்போர் கூட்டமும் தூக்கிப் பிழைப்போர் கூட்டமும் மிக வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன.

இரவு 7-30 மணி.

படகு மெல்லக் கரையைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# "வளைகுடாப் போரின் ஓராண்டு நிறைவு"

கடந்த ஆண்டில் இரண்டு மாபெரும் வெற்றிகளை அமெரிக்கா உலகிற்கு அறிவித்தது. ஒன்று வளைகுடா போரின் வெற்றி. மற்றையது கெடுபிடிப் போரின் வெற்றி. இவையிரண்டும் உலகத்தின் தலைவனாகி தன்னை ஆக்கி முடி சூடிக்கொள்ள முயலும் அமெரிக்காவின் கிரீடத்தில் இரண்டு வைரங்களாக பிரகாசிக்கும் என அமெரிக்கா நினைக்கிறது.

வளைகுடா போர் ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியாகி உள்ள இவ்வேளையில் இப்போர் பற்றிய பல்வேறு விமரிசனங்களும் முன்வைக்கப்படுகின்றன. வெற்றி பெற்றவன் என்ற முறையில் ஜோர்ஜ் புஷ் கதாநாயகனாகவும் தோல்வியுற்றவர் என்ற முறையில் சதாம் வில்லனாகவும் வர்ணிக்கப்படுகிறார். அவர் தண்டிக்கப்பட வேண்டியவர். அழிக்கப்பட வேண்டியவர் என்ற கருத்துக்கூட நிலவுகிறது.

சதாம் மத்தியகிழக்கில் ஒரு பெரும் சக்தியாகஉருவெடுத்து வருவதை வல்லரசுகள் மிகவும் கவலையோடு பார்த்து வந்தன. வல்லரசுகளின் உதவியுடனேயே அது தன்னை ஒரு அணு வல்லரசாக உருவாக்கிக் கொண்டிருந்தது. ஒரு தடவை அவர் நிமாணித்த அணு உலையை இஸ்ரேலியர் தாக்கி அழித்தனர். எனினும் ஈராக்கின் அணு ஆயுத உற்பத்திக்கான ஆராய்ச்சியை எவராலும் தடுக்க முடியவில்லை

இவ்வாறு ஈராக் பெரிய வல்லாசாகஉருவாகிவருவதை இஸ்ரேல் அமெரிக்கா மட்டுமல்ல அண்டைய அரபு நாடுகள் கூட விரும்பவில்லை சிரியாவின் தலைவர் அஸாத், எகிப்தின் தலைவர் முபாரக் ஆகியோர் சதாமை எதிரியாகவே பார்த்தனர். ஈரான் அவரது வீழ்ச்சியை விரும்பும் ஒரு நாடாக இருந்தது சவூதி அரேபியாவிற்கு சதாம் தன்னை ஆக்கிரமித்து விடுவாரோ என்ற அச்சம் எப்போதும் இருந்தே வந்தது. ஜோர்தானிய மன்னர் மட்டுமே சதாமின் ஒரேயொரு நண்பராக இருந்தார்.

எனவே, சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த அமெரிக்காவிற்கும் அரபுநாடுகளுக்கும் சதாம் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்ததாகவே அவரது குவைத் மீதான படையெடுப்பு முடிந்தது.

குவைத்தைக் கைப்பற்றிய சதாம்சவூதியையும் கைப்பற்றிவிட்டால் எண்ணெய் வர்த்தகம் முழுவதையும் ஈராக் கைப்பற்றிவிடலாம் என மேற்குலக நாடுகள் அஞ்சின. இன்றைய நிலையில் அவ்வாறு நடைபெற்றால் வல்லரசுகள் ஈராக்கிடம் மண்டியிட வேண்டிய நிலை ஏற்படும் என அமெரிக்கா கருதியது.

சதாம், குவைத்தை கைப்பற்றிக்கொண்டதைச்சாட்டாக வைத்து, அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் சதாமை முடக்குவதற்கு இதுதான் சரியன சந்தர்ப்பம் என கருதிஉடனடியாக செயற்பட்டன.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் இரண்டு முறைதான் சவூதி மன்னருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். 2 ஆம் முறையில் சவூதி மன்னர் அமெரிக்கபடைகள் சவூதியில் வந்து இறங்க சம்மதம் தெரிவித்தவிட்டார். இதனையடுத்து நேசநாட்டுப்படைகள் சவூதியிலும் ஐக்கிய அரபுக் குடியரசு நடுகளிலும் வந்து குவியத்தொடங்கின.

இதனை சதாம் எதிர்பார்க்கவில்லை என கருதப்படுகிறது. தான் குவைத்தை கைப்பற்றினால் ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவிக்கும், மேற்கத்திய நாடுகள் பொருளாதார தடையை விதிக்கும், கண்டனங்களுடன் எல்லாம் முடிவடைந்து விடும் என அவர் கருதியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு படையெடுப்பு ஆயத்தங்கள் நடைபெறத் தொடங்கியதும் சதாம் இரு பெரும் தந்திரங்களை கைக்கொள்ள எண்ணினார். ஒன்று எண்ணெய் விலையேற்றம். வளைகுடாவில் யுத்தம் ஆரம்பித்ததும் எண்ணெய் விலை அதிகரிக்கும். இதன் மூலம் ஆசிய நாடுகளில் மட்டுமன்றி வளர்ச்சியடைந்த மேற்கத்திய நாடுகளிலும் உற்பத்திகள் பாதிக்கப்படும். இதன் மூலம் அமெரிக்காவினதும் நேசநாடுகளினதும் படையெடுப்பை உலகநாடுகள் கண்டிக்கும் என அவர் நினைத்தார்.

ஆனால் சவூதி அரேபியாவும் ஏனைய வளைகுடா நாடுகளும் எண்ணெய் உற்பத்தியை அதிகரித்ததன் மூலம் எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்தது.

இரண்டாவது தந்திரம் இஸ்ரேலை போருக்கு இழுத்துவிடுவதன் மூலம் மத்தியகிழக்கு நாடுகளை நேச அணியிலிருந்து பிரித்துவிடுவது.

இதனை நிறைவேற்ற ஜனவரி 17இல் இஸ்ரேலின் தலைநகரம் டெல் அவிவ் மீது ஈராக் 'ஸ்கட்' ஏவுகணைகளை ஏவிவிட்டது. இந்தநிலையில் ஆத்திரமடைந்த இஸ்ரேல் தமது 12 சண்டை விமானங்களை தயார் நிலையில் வைத்திருந்ததாகவும் தாக்குதல் நடத்த அமெரிக்காவின் அனுமதி கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் அனுமதி ஏன் தேவைப்பட்டது? வளைகுடாவில் நூற்றுக்கணக்கான விமானங்கள் போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. இவற்றில் நேச விமானம் எது? எதிரி விமானம் எது? என கண்டுபிடிக்க ஒரு அறிமுக சமிக்ஞையை நேசநாடுகள் தம்மிடையே பயன்படுத்தி வந்தன. அந்த சமிக்ஞை இல்லாது செல்லும் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படும் ஆபத்து இருந்தது.

எனவே இந்த சமிக்ஞையை தமக்கு தெரிவிக்கும் படியும் தனது தாக்குதல் முடிவடையும் வரை நேசப்படைகளின் தாக்குதலை நிறுத்தி வைக்கும் படியும் இஸ்ரேல், அமெரிக்காவை கேட்டுக் கொண்டது.

ஆனால் டஷ் அதற்கு சம்மதிக்கவில்லைபதிலாக 'ஸ்கட்' ஏவுகணைகளை இடைமறித்து தாக்கும் 'பெற்றியாட்' ஏவுகணைகளை இஸ்ரேலுக்கு அனுப்பிவைத்தார். யுத்தத்தில் தான் பயன்படுத்திய விமானங்களில் 15சதவீதத்தை ஈராக்கிய ஏவுகணைகளை வேட்டையாட ஒதுக்கினார். இதன்மூலம் ஈராக்கின் இரண்டாவது திட்டமும் நிறைவேறவில்லை.

இலத்திரனியல் யுத்தத்தின் புதிய வளர்ச்சி இந்த யுத்தத்தில் முற்றுமுழுதாக பயன்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் எவ்-117 ஏஸ்டெல்த் யுத்த விமானம் முதன் முதலாக வளைகுடாவில் தான் பயன்படுத்தப்பட்டது.'ராடர்' திரையில் விழாத இவ்விமானம் நவீன சாதனங்களைக் கொண்டது.குறிதவறாது தாக்குதலை நடத்தக்கூடியது. வியட்நாம் யுத்த காலத்தில் பங்குவகித்த பி - 52 விமானங்களும் இந்த யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டன. இவை 40 ஆயிரம் இறாத்தல் குண்டுகளை ஒரே தடவையில் காவிச் சென்று இலக்குகளை நோக்கி வீசக்கூடியன.

'ஸ்மார்ட்பம்ஸ்' எனப்படும் இலக்குகளை தேடியழிக்கும் குண்டுகள் நீண்டதூரம் பயணம் செய்து இலக்கை துல்லியமாகத்தாக்கும் 'குரூஸ்' ஏவுகணைகள் என்பன தாராளமாக பயன்படுத்தப்பட்டன.

# சதாமின் தவறான கணிப்பீடு அமெரிக்காவிற்குகிடைத்த அரியசந்தர்ப்பம்

ஈராக்கின் மீது தினமொன்றுக்கு 2000 அல்லது 3000 தடவைகள் விமானங்கள் குண்டு வீச்சை நிகழ்த்தின. இவ்வாறு தொடர்ச்சியாக 43 நாட்களில் 73 ஆயிரம் தடவைகள் குண்டு வீச்சுகள் நடாத்தப்பட்டன. பக்தாத்தின் மின்சார, நீர், தொலைத்தொடர்பு வசதிகள் யாவும் அழிக்கப்பட்டன. பஸ்ரா நகரமும் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகியது.

விமானத் தாக்குதலுக்கு முன் பாக்தாத் வான் வெளியில் உயரத்தில் ஒரு சிறிய அணுவெடிப்பை மேற்கொள்வதெனவும் அதன் மூலம் பாக்தாத்தில் உள்ள சகல இலத்திரனியல் சாதனங்களையும்செயலிழக்கச் செய்யலாம் எனவும் அமெரிக்க இராணுவத்தளபதி நார்மன் சுவஸ்கோப் கூறினார் எனவும் அதற்கு புஷ் சம்மதிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

பெப்ரவரி 21 ஆம் திகதி தரைத்தாக்குதல் ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது. ஆனால் சுபாஸ்கோப் மேலும் சில தினங்களுக்கு தரைத்தாக்குதலை பின் போடுவதற்கு விரும்பினார். ஆனால் அமிரியா நகரில் ஒரு பதுங்கு குழியில் போடப்பட்ட குண்டு நூற்றுக்கணக்கான ஈராக்கிய பொதுமக்களை பலிகொண்ட சம்பவம் உலகமக்களின் அபிப்பிராயத்தை திசை திருப்பிவிடலாம் என அமெரிக்கா நினைத்தது.

எனவே 23 ஆம் திகதி தரைத்தாக்குதல் நடாத்த உத்தரவிடப்பட்டது

அமெரிக்காவின் பிரதம தளபதி நார்மன் சுவாஸ்கோப் ஈராக்குடனான போரில் கூட்டுப்படைகளில் 10 சதவீதமானோரை அல்லது 40 ஆயிரம் அமெரிக்க இராணுவத்தினரை இழக்க வேண்டிவரும் என எண்ணினார். வியட்நாமில் 47 ஆயிரத்து 358 பேரை இழந்த அமெரிக்கா அதன் விளைவுகளை நினைத்து தரைப் போரை ஆரம்பிக்க தயங்கிக்கொண்டிருந்தது.எனினும் வேறுவழியின்றி தரைப் போர் பெப்ரவரி 23இல் ஆரம்பிக்கப்பட்டது

அமெரிக்காவின் தரைவழி யுத்தவெற்றிக்கு காரணமாயிருந்த ஓர் இராணுவ தாக்குதலாக அமைந்தது சவூதி எல்லை வழியாக மேற்கு ஈராக் பக்கமாகசென்று ஈராக்கிய படையினரை பின்புறமாக தாக்கிய சம்பவமாகும்.

இத்தாக்குதலுக்கு இரண்டு இலட்சம் பேரை 300 மைல் தூரத்திற்கு ஆயுதங்கள் மற்றும் உணவுகளுடன் ஈராக்கிற்கு நகர்த்த வேண்டியிருந்தது. சவூதி பாலைவனத்தின் ஊடாக 4500 வாகனங்கள் இராணுவத்தினர், ஆயுதங்கள் என்பன பத்துநாட்களாக இந்த நகர்வு நடைபெற்றது.

இந்தச்சமயத்தில் ஈராக்கிய விமானப்படை முற்றாக முடக்கப்பட்ட நிலையில் இருந்தமையால் இந்தநகர்வை ஈராக்கினால் அவதானிக்க முடியாது போய்விட்டது.

ஆனால் சோவியத்தின் செய்மதிகள் இந்த நகர்வை கண்காணித்தன. இந்நகர்வு பற்றி கொர்பசேவ்ஈராக்கிற்கு அறிவித்துவிடலாம் என அமெரிக்கா நினைத்தது. ஆனால் அவ்வாறு நிகழவில்லை.

இந்த நகர்வை அறிந்திருந்தும் கொர்பசேவ் ஈராக்கிற்கு அறிவிக்கவில்லை என அமெரிக்க இராணுவ நிபுணர்கள் கருதுகின்றனர். ஆனால் சதாமுக்குஇவ்விடயத்தை கொர்பசேவ் அறிவித்தார் எனவும் ஆனால் இறுதிநேரத்தில் எச்சரிக்கை கிடைத்ததால் ஈராக்கினால் எதுவும் செய்யமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

100 மணித்தியாலமே இடம்பெற்ற தரையுத்தத்தில் அமெரிக்க பிரெஞ்சு, சவூதி படைகள் குவைத்தையும் ஈராக்கின் சில பகுதிகளையும் கைப்பற்றிக்கொண்டன.

வளைகுடா யுத்தத்தின் இழப்புகள் பற்றிய செய்திகள் ஒரு பக்கத்தில் இருந்தே கிடைத்துள்ளன. இதன் படி நேசநாடுகளைச் சேர்ந்த 149 படையினர் பலியாகியுள்ளனர் 513 பேர் காயம் அடைந்துள்ளனர்.

ஈராக் தரப்பில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்தோ அல்லது காயமடைந்தோ உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் ஈராக் தனது டாங்கிகளில் 65 சதவீதத்தையும் எறிகணை செலுத்திகளில் 61 சதவீதத்தையும் விமானங்களில் 49 சதவீதத்தையும் இழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பெரும் பொருளாதார இழப்பையும் உயிரிழப்பையும் அது சந்தித்துள்ளது அத்துடன் பெரும்பொருளாதாரச் சிக்கலில் தற்போது அமிழ்ந்துபோயுள்ளது.

யுத்தத்திற்கு அமெரிக்காவினால் 47 ஆயிரத்து 500 மில்லியன் டாலர்களும் நேசநாடுகளால் 53ஆயிரத்து 500 மில்லியன் டாலர்களும் செலவு செய்யப்பட்டுள்ளன.

# பிரச்சினைகளுக்கு கேள்விமூலம் தீர்வுகண்ட சோக்கிரட்டீஸ்

உலகத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்துமே இந்தஇயற்கையின் பொதுவான சில விதிகளுக்கு உட்பட்டு வாழ்கின்றன.இந்த ஜீவராசிகள் தங்களுக்க உரிய சில தனித்தனி பழக்கவழக்கங்களுக்கும் ஏற்றாற்போலவாழ்கின்றன.இந்த ஜீவராசிகளில் மனிதனே மேலான முதன்மையான இடத்தை வகிக்கின்றான். ஏனெனில் இவனிடம் தான் திட்டமிட்ட வாழ்க்கைமுறை ஒன்று அறிவியல்ரீதியாக உணரப்பட்டிருந்தது இந்த திட்டமிடலானது மனிதனை ஏனைய ஜீவராசிகளில் இருந்து வேறுபடுத்தியது இயற்கையில் கதிரவன் நிலா. விண்மீன்கள் போலவே மனிதனுக்கும் இந்த பூமியில் நிலையான இடம் உண்டு என்பதை இந்த மனித இனம் விளங்கியிருந்தது. ஆயினும் மனிதன் தோன்றி பன்னெடுங்காலத்தின் பின்பேமனிதரிலும் மேலானவர்களாக சிந்தனையாளர்கள் தத்துவ ஞானிகள் தோற்றம் பெறறனர். இவர்கள் இயற்கையின் மாற்றங்களையும் வளர்ச்சி விதிகளையும் சமூக அமைப்பையும் தமது சிந்தனைக்கு உட்படுத்தி எதிர்காலத்தில் நிகழவிருக்கும் மாற்றங்களை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்துதீர்க்கதரிசனத்துடன்தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

உலகத்தின் அறிவியல் ஊற்றுக்களின் மையங்களாககிரேக் விம் சீனா, இந்தியா என்பன களங்கின இதில் கிரேக்க சிந்தனை மரபு நவீன வரலாற்றிலும் இழையோடிக்கிடப்பவை இன்றும் நாம் அவதானிக்க முடிகிறது. இந்தியாவில் ஆரியப்பட்டைபம்போல சீனாவில் கொன்பியூசியசைப்போல கிரேக்கத்துள சிந்தனைமரபை தொடக்கிவைத்தவர் தான் சோக்கிரட்டீஸ் இவர் கிரேக்கச்சிந்தனையின தந்தைஎன்று போற்றபபடுகிறார். இவர் சிந்தனை உலகுககு அளித்த முக்கிய பங்களிப்பு கேளவிக் குறியாகும்.

## நேசன்

சோக்கிரட்டீஸின் அறிவையும் சிந்தனையையும் புரிந்து கொள்ள அவரின் வாழ்க்கைச் சூழலையும், அவரின் வாழ்க்கை முறையையும், அவரின் கருத்துக்களையும் அதனால் அவர் எதிர்நோக்கிய சவால்களையும் அதனை அவர் முறியடித்த வழியையும் நாம் பார்ப்பதன் மூலமே அவரைப்பற்றி மதிப்பிட முடியும்.

இவர் கிரேக்கநாட்டில்எதென்ஸ் நகரத்தில் கி மு 470ஆம் ஆண்டு பிறந்தார் தகப்பனார் செய்த சிற்பம் செதுக்கும் தொழிலை விட்டு தத்துவம் படிப்பதில் ஆர்வம் காட்டிய இவர் கிரேக்க நகர அரசின் 'அடொம்சின் என்ற அமைப்பின் ஆலோசகர் குழுவின் ஓர் உறுப்பினராக சிறிது காலம் கடமையாற்றினார் இதனால் அரசின் செயற்பாடுகள் பற்றியும் அதன் பலவீனங்கள் பற்றியும் நன்கு அறிந்திருந்தார்.

சோக்கிரட்டீஸ் வழிபடும் ஆலயத்தின் முன்புறத்திலே ''உன்னையே நீ அறிந்து கொள்'' என்று பொறிக்கப்பட்டிருந்த வாக்கியத்தைக் கண்டு அதனாலும் அவர் சிந்தனை தெளிவு பெற்றார் என்று கூறப்படுகின்றது பண்டைய கிரேக்க வழிபாட்டு முறையில் ஆர்வம்கொண்டிருந்த சோக்கிரட்டீஸ் அரசியலும் சட்டமும் தெய்வீக ஆற்றலுக்குட்பட்டவை என நம்பினார். இவர் அரசியல்.அரசியல் சட்டங்கள் பற்றிய பலவரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வியை மாணவர்களுக்குபோதித்தார் கல்வியை வேதனத்துக்காக போதிப்பது அறிஞர்களுக்கு தகாதசெயல் என கருதியகாரணத்தினால் அவர் வறுமையிலும் ஏழ்மையிலும்வாடினர்.

சோக்கிரட்டீஸ் நூல்கள் எதனையும் எழுதவில்லை. உரையாடல்கள் மூலம் தன்னுடையகருத்துக்களை கூறுவதே அவரின் சுபாவம் ஆகும். இவர் சிந்தனை உலகுக்கு செய்தமுக்கியமான பணி எதனையும் கேள்விக்குட்படுத்தி விடை காணுவதே.இந்த இயற்கையில் நிகழும் ஒவ்வொரு மாற்றங்களையும் கேள்விக்குட்படுத்தி பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டார் இளைஞர்களிடம் தான் அதிகம் கற்றுக் கொள்ள விரும்பினர். அறியாமையைப் போக்குவதற்கு கேள்விகேட்பது, பதில் சொல்வது, கருத்துக்களை வாவழைப்பது போன்ற முறைகளை கையாண்டார். ஏன்? எதற்கு? எப்போது? எங்கே? எப்படி? என்ற கேள்விகளை அவர் எழுப்பி கிரேக்கசிந்தனை மரபைத் தொடக்கிவைத்தார் இதனால் இளைஞர்கள்,முதியோர்கள். ஏழைகள் எல்லோரும் அவரின்பால் சென்றனர் இந்த

(6-ஆம் பக்கம் பார்க்க)

## ஈழநாதம்
## இரண்டாம் ஆண்டு நிறைவு
# போட்டிகளும்
** ** ** ** **
# விதிமுறைகளும்
** ** ** ** ** ** ** **

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் இரண்டாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறு கதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப் படும்.

★ கருத்துப் படங்கள் (Cartoon)
★ சிறுகதை
★ கவிதை

### போட்டியில் கலந்துகொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ. மீ. X 12 செ. மீ. அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவ ன கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்,

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தில் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன் பிந்திக் கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1992 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும். இரண்டாவதுஆண்டு நிறைவு விழாபோட்டியில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

★ ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு இரண்டாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' இரண்டாம் ஆண்டு நிறைவுப்போட்டி என கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

**ஆசிரியர்**
**'ஈழநாதம்'**
**31, மகேந்திரா வீதி,**
**யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பாதையும்

தொட்டது. சைக்கிள்கள் அவசர அவசரமாக இறக்கப் பட்டன.

''ஐயோ...! மாரியாத்தா அம்மா..''

எனது மோட்டார் சைக்கிளை அந்த அவசர நோயாளியின் மேல் விழுத்தி விட்டார்கள். சைக்கிளின் கான்ரில் அந்தப் பெண்ணின் கெண்டைக் காலைப் பிய்த்துவிட்டது. பாவம் அழுவதற்குக் கூட சக்தியில்லை. காயம் ஆழமானது. ஆனால் இரத்தம் பெருகவில்லை; இரத்தம் அவள் உடலில் இருந்தால் தானே வருவதற்கு. அவசரமாக எனது சைக்கிளைத் தூக்கி நிமிர்த்தினேன். அந்த துயரத்தைப் பார்த்துக் கொண்டு நிற்க யாருக்கும் நேரமில்லை. அவசரமான உலகம்; சலிப்பான பயணம்.

சிரிப்புடன் தொடங்கி வேதனையோடு முடிந்த நேற்று முன்தினப் பயணத்தின் நினைவிலிருந்து விடுபட்டேன்,

மழை கொட்டுவதற்கான அறிகுறிகள் அடிவானில் பெருக்கெடுத்து விட்டதைப் பார்க்கிறேன்.

தோளில் மெதுவாக ஒரு கை பதிந்தது.

திரும்பிப் பார்க்கிறேன்

''என்ன மாஸ்ரர் யோசிச்சு என்ன செய்யிறது; வாருங்கோ புளிச்சல் தோசையும் பருப்பு சாம்பாரும் அடிச்சால் தான் அங்கால உரம்பலமாய் நடக்கலாம்''

துப்பாக்கியுடனும் தோளில் ஒரு கனமான பசளைப் பையுடனும் நின்றான் மைந்தன்.

''எல்லாம் நல்லதுக்குத் தான் மைந்தன்: இந்தக் கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் ஒரு முடிவு வராமலா போகப் போகுது; சனத்தை துன்பப்படுத்திறதால தாங்கள் இலகுவில் வெற்றி பெறலாமெண்டு சிங்களவன் தப்புக்கணக்கு போடுறான். இந்த ஒடுக்குதல் பேராட்டத்தில எந்தளவு வெடிப்பைக் கொடுக்கப் போகுதெண்டு கொஞ்ச நாளில படிக்கப் போகினம்''

மைந்தன் பெரிதாகச் சிரித்தான்.

உறுதியாகத் தலையசைத்தான்.

மழைத்துளிகள் மெதுவாக விழத் தொடங்கியது.

பாதை துயரம் நிறைந்தது தான் ஆனால் மைந்தனின் உறுதியான சிரிப்பும் உடலில் விழுந்த மழைத்துளியும் என் நம்பிக்கைக்கு ஒத்தணம் கொடுத்தன. பயணம் நம்பிக்கையானதுதான்.

படகு மெல்ல ஊரத் தொடங்கியது.

பிரச்சினைகளுக்கு

நிகழ்வானது வழமையான மரபுரீதியாக இருந்து வந்த கிரேக்க சமூகத்தில் வித்தியாசமான மாற்றத்தை ஏற்படுத்தியது. இம்மாற்றம் கிரேக்கத்தின் வழமையான அரசியல் அமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தி விடும் என அஞ்சிய கிரேக்கஅரசு சோக்கிரட்டீசின் மீது மூன்று குற்றங்களைச் சுமத்தி அவரைச்சிறையில்அடைத்தது. ஏனெனில் ஏற்கனவே இருந்துவரும் வழமையானஅரசியல், சமூகஅமைப்பில் புதிய மாற்றங்கள், சிந்தனை மரபுகள் ஏற்படுவதை அரசோஅல்லது ஆட்சியாளர்களோ விரும்ப மாட்டார்கள் அந்த வகையில் சோக்கிரட்டீசுக்கும் அவரின் சிந்தனை முறைக்கும் அப்போது அந்த அரசில் இடம் கிடைக்கவில்லை.

சோக்கிரட்டீசினுடைய 70 ஆவது வயதில் அவர் மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டன.

1 நாட்டின் தெய்வங்களை வழிபட மறுத்தல்.

2. அரசினை நிந்தனைசெய்தல்.

3. இளைஞர்களின் உள்ளங்களையும், எண்ணங்களையும் பாழ்படுத்தல்.

இக் குற்றங்களுக்காக கிரேக்கநீதிமன்றம் அவருக்குமரண தண்டனை நிறைவேற்றியது. ஆனால்நீதிபதிகள் சோக்கிரட்டீசின் நண்பர்களாய் இருந்ததனால் அவருக்கு மரணதண்டனை விதிக்க மனச்சாட்சி இடம் கொடுக்காததால் "நீ இந்தக்குற்றங்களை இனிமேல் புரியமாட்டேன் என்று கூறி, மன்னிப்பு கேள். நாங்கள் உன்னை விடுதலை செய்கிறோம்'' என்றனர்.சோக்கிரட்டீசோ இதற்குமறுமொழியாக "என்கருத்துக்களைபுதைத்து விட்டு என்னை உயிர் வாழச் சொல்கிறீர்களா? அது வேண்டாம் என்னைப் புதையுங்கள் என் கருத்துக்கள் உயிர்வாழட்டும்''என்றார். அவர் தன்னுடைய உயிருக்காக தன்னுடைய கருத்துக்களை மாற்றிக் கொள்ளவில்லை. மரண தண்டனை நிறைவேற்றப் பட்ட சோக்கிரட்டீஸ் முப்பது நாட்கள் சிறையில் இருந்தார்.

முப்பதாவது நாள் சோக்கிரட்டீசின் நெருங்கிய நண்பரானகிரீட்டோ தப்பிஓடிவிடும்படி அவரைக் கேட்டுக்கொண்டார் அதற்கு சோக்கிரட்டீஸ் ''அரசசட்டத்தை மீறி ஓடிய கோழை என்றபட்டம் எனக்கு கிடைப்பதை விட சட்டத்தை மதித்து நடந்த நேர்மையுள்ளவன் என்ற மதிப்பையே பெற விரும்புகிறேன்''எனக்கூறிவிஷத்தை அருந்திகொள்கைக்காக தனது உயிரைவிட்டு சிந்தனைக்கு உயிர் கொடுத்தார்.

வரலாற்றில் புதிய கருத்துக்களையும், சிந்தனைகளையும் முன்வைப்பவர்கள் அந்த கால கட்டத்தில் மதிக்கப்படுவதில்லை. ''தீர்க்கதரிசிகள் சொந்தமண்ணில் மதிக்கப்படுவதில்லை'' என்ற நிலை இவருக்கும் அப்போதுஏற்பட்டது. ஆனால்சிலநூற்றாண்டுகளின் பின்பு கிரேக்க மக்கள் தமது சிந்தனையாளரை தாமே கொன்று விட்டதை எண்ணி கண்ணீர் விட்டனர். சோக்கிரட்டீசின் மாணவர்களாகிய பிளாட்டோ, அரிஸ்ரோட்டில் போன்றோர்களால் அவரின் சிந்தனை முறை உலகுக்கு வெளிக் கொணரப்பட்டது. பிற்கால சிந்தனை உலகின்வழிகாட்டியாக திகழும் சோக்கிரட்டீசை அன்றைய கிரேக்க அரசு அழித்தாலும் 'வரலாறு அவரை விடுதலை செய்து விட்டது''

-நேசன்


DHL உங்கள் கடிதங்களை
பாதுகாப்பாக உலகம் முழுவதும்
எடுத்துச் செல்கிறது
உங்களின் நண்பன்
DHL தபால் சேவை

**D.H.L. INTERNATIONAL**
C/o Cosmos Marketing Services
120, (200) K.K. S. Road,
Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(சி 3815)



உள்நாட்டு, சர்வதேச
தொலைத் தொடர்புகள்

1. உள்நாட்டுத் தந்தி
(24 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)
2 வெளிநாட்டுத் தந்தி
(30 மணித்தியாலங்களில் உரியுவரிடம் சேரும்)
3. **FAX** (ஃபக்ஸ்)
❋ உள்ளூர் செய்திகள்
(24 மணித்தியாலங்களில் சேரும்)
❋ வெளிநாட்டுச் செய்திகள்
(24 மணித்தியாலங்களில் சேரும்)
(செய்திகள் A4 அளவு தாளில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்)
4. **TELEX** (ரெலெக்ஸ்)
(24 மணித்தியாலங்களில் சேரும்)
5. தொலைபேசி - செய்தி
(120 மணித்தியாலங்களில்) (5 நாட்களின் பின் பதிலுடன் அறிவிக்கப்படும்)
❋ அவசர (URGENT) தொலைபேசிச்செய்தி
(பதிலுடன் 2நாட்கள்) (48 மணித்தியாலங்களில்)
6. ரேடியோ அல்லது
பத்திரிகை விளம்பரங்கள்
❋ மரண அறிவித்தல்கள்
(2 நாட்கள்)
❋ பிறந்தநாள் வாழ்த்துக்கள் போன்றவை
(3 நாட்கள்)
❋ கலர்படங்கள் 15 நாட்களில் கழுவிக் கொடுக்கப்படும்

BEACON
தொலைத்தொடர்புகள்,
380, ஆஸ்பத்திரி வீதி,
ஸ்ரேசன் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி/3813)

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

4

அன்ரன் பாலசிங்கம்

அமைச்சர் தொண்டமான் ஆரம்பத்தில் எமக்கு சமர்ப்பித்திருந்த யோசனைகள் முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருப்பினும் தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகளை பூர்த்திசெய்யும் வகையில் ஒரு முழுமையான தீர்வுத் திட்டமாக அது அமையவில்லை என நாம் சுட்டிக்காட்டியிருந்ததும், அப்படியான ஒரு தீர்வுத் திட்டம் அரசாங்கத்தினதும் எதிர்க் கட்சிகளினதும் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பது அவசியமென நாம் வலியுறுத்தியிருந்ததும் அவருக்கு புதிய நிர்ப்பந்தத்தை கொடுத்தது. அதாவது எமது நியாயமான, தர்க்கரீதியான வேண்டுகோளின்படி அவர் இரண்டு காரியங்களை செய்ய வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டார்.

ஒன்று, தமிழீழ மக்களை திருப்திப்படுத்தும் வகையில் ஓர் ஆக்கபூர்வமான, முழுமையான தீர்வுத் திட்டத்தை உருவாக்குவது. இரண்டாவது, அத் தீர்வுத் திட்டத்திற்கு ஆளும் கட்சியினதும் எதிர்க் கட்சிகளினதும் ஆதரவைப் பெறுவது. இந்த இரண்டு காரியங்களையும் செய்து முடிப்பதில் தான் ஈடுபட்டிருப்பதாகவும், அவற்றை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் வருகைதந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களைத் தொடரப்போவதாகவும் திரு. தொண்டமான் எமக்கு அறிவித்தார்.

6.12.1991ல் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மகேந்திரராசாவுக்கு அவர்எழுதிய கடிதத்தில்,

''உங்கள் கடிதத்தை மிகவும் கவனமாகப் படித்துள்ளேன். எமது நாட்டில் எல்லா சார்பினரும் ஏற்றுச் செயற்படுத்தக் கூடிய தீர்வுக்கேற்ற யோசனைகளை உருவாக்குவதில் நான் இப்பொழுது ஈடுபட்டுள்ளேன். நான் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுடன் ஆலோசனை நடத்தியபின், எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களுடனும், திரு. அனுரா பண்டாரநாயக்கா அவர்களுடனும் கருத்துக்கள் பரிமாறியுள்ளேன். அதைத் தொடர்ந்து திரு.தினேஷ் குணவர்த்தனா, திரு. அஸ்ரப் ஆகியோரின் நிலைப்பாடுகளையும் அறிந்து கொண்டேன். நீங்கள் முன்னர் எடுத்துரைத்த யோசனையின்படி முழுமையானதோர் திட்டத்தை உருவாக்கியுள்ளேன்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச்சமர்ப்பிக்க வேண்டிய யோசனைகள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் கொடுக்கப்படவேண்டும். எனவே எனதுதிட்டத்தைஅடுத்த கிழமை முற்பகுதியில் முன்வைக்க உத்தேசித்துள்ளேன். அத்திட்டத்தை இம்மாதம் 10ஆம் திகதி உங்களுக்கு அனுப்பி வைப்பேன். உங்களை நேரில் சந்திப்பதற்கு முன் பாராளுமன்ற தெரிவுக்குழு அங்கத்தவர்களோடு கலந்தாலோசித்து, அவர்களின் ஏகோபித்த அனுசரணையைப் பெற விரும்புகிறேன். அந்த நிலைப்பாட்டை அறிந்து கொண்டு, உங்களோடு நடத்தும்பேச்சுவார்த்தையில் எனது திட்டத்தை முழுமையாக உருவாக்கலாம். அத்தோடு அரசாங்கத்தோடு நிறைவேற்ற வேண்டிய தீர்வுக்கு ஏற்ற அடிப்படை நிலைப்பாடுகளையும் வகுத்துக் கொள்ளலாம்.

மேற்கூறியவற்றை எல்லாம் ஆழ்ந்த சிந்தனையோடு செய்வது எமது சமாதான முயற்சிக்கு முக்கியமாகும். எனவே எல்லா ஒழுங்குகளையும் செய்து கொண்டு யாழ்ப்பாணம் வருவதையே நான் விரும்புகிறேன். தைப்பொங்கல் முடிந்வுடன் வருவதற்கு யோசித்துள்ளேன். இந்த ஏற்பாட்டிற்கு உங்கள் சம்மதத்தை அறிவிக்கவும். அச்சந்தர்ப்பத்தில் உங்கள் இயக்கத் தலைவர் திரு.வே. பிரபாகரனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த இயலுமானால்நாம் ஸ்திரமான நிலைப்பாடுகளை வகுத்துக் கொள்ளலாம்.

அத்தோடு நான் எனது முயற்சியை இங்கே மேலெடுத்துச் செல்வதற்கு எனது கையும் பலப்படுத்தப்படும்'' என திரு தொண்டமான் குறிப்பிட்டிருந்தார்.

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக ஓர் அமைதி நிலையைத் தோற்றுவிக்கும் அவசியம் பற்றியும் பொருளாதாரத் தடைகளை நீக்குவதன் தேவை பற்றியும் விடுதலைப் புலிகள் வலியுறுத்திய போதும் திரு. தொண்டமான். அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இது பற்றி திரு தொண்டமான் பிரேமதாசாவுடன் பேசியதாக அறிந்தோம். எனினும் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது திணித்த இராணுவ - பொருளாதார அழுத்தங்களை தளர்த்த விரும்பவில்லை. இன்னொரு விதத்தில்சொல்லப்போனால், புலிகள் - தொண்டமான் பேச்சுக்குவழிவகுத்துக்கொடுக்கும் சுமுக புறநிலையை உருவாக்கிக் கொடுக்க அரசாங்கம் விரும்பவில்லை. எனவே இந்தப்பிரச்சினையை முதன்மைப் படுத்தாமல்,அதனைத்தட்டிக் கழிக்கும் தோரணையில்.அரசியல் தீர்வு ஏற்பட்ட பின்னர் அது தானாகவே தீர்ந்துவிடும் என திரு. தொண்டமான் கருத்துத் தெரிவித்தார்.

''பேச்சு வார்த்தைக்கு வேண்டிய சுமுகமான சூழ்நிலை, பொருளாதாரத் தடையை நீக்குதல் ஆகியனவற்றைக் குறிப்பிட்டிருந்தீர்கள். அரசியல் தீர்வு நிறைவு பெறும் பொழுது இவை தாமாகவே நீங்கும் என்பதே எனது கருத்து'' என திரு. தொண்டமான் இக்கடிதத்தில் குறிப்பிட்டார்.

## இந்திய நிலைப்பாடு

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில் அமைச்சர் தொண்டமான் ஒரு சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பதும், யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை நடத்தப் போகிறார் என்பதும் கொழும்பு, வெளிநாட்டுப் பத்திரிகைகள் மூலம் பிரபல்யமாகத்தொடங்கிற்று - மெல்ல மெல்ல இந்தியாவினதும், சர்வதேச சமூகத்தினதும் கவனம் தொண்டமானின் முயற்சிகள் மீது திரும்பியது.

இதற்கிடையில்திரு.தொண்டமான் இந்தியாவுக்கு ஒரு சுற்றுலா விஜயத்தை மேற்கொண்டபோது புதுடில்லியில் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து தனது சமாதானமுயற்சி பற்றி விளக்கியிருக்கிறார்.இந்தியாவில் என்னபேசப்பட்டது என்ற விபரம் எமக்குத் தெரியாது. திரு. தொண்டமானும் அது பற்றி எமக்கு எழுதவில்லை. இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் பேசியபொழுது அவர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் என்று மட்டும் திரு.தொண்டமான் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

திரு.தொண்டமானின்முயற்சியை இந்திய அரசு உற்சாகமாக வரவேற்கவில்லை என்பதையே திரு, நரசிம்மராவின் மௌனம் தெளிவாக எடுத்துக்காட்டியது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குறுகிய வரையறைக்குள் திரு. தொண்டமான் தனது அரசியல் காய்களை நகர்த்தவில்லை என்பது இந்திய அரசுக்கு புரிந்தது. அத்துடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தமிழ் நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டவும் புலிகளுக்கு சர்வதேச ரீதியாக களங்கத்தை ஏற்படுத்திவிடவும் இந்திய அரசு பகீரதப் பிரயத்தனம் செய்துவரும் வேளையில் தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை அங்கீகரித்து, இந்திய - இலங்கை உடன்பாட்டு எல்லைக்கு அப்பால் புலிகளுடன் சமரசம் செய்து கொள்ள திரு.தொண்டமான் எடுத்துவரும் முயற்சி இந்தியாவுக்கு மகிழ்ச்சி அளிக்குமென எதிர்பார்க்க முடியாது. தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினையில் இந்தியாவின் மத்தியஸ்துவமோ, தலையீடோ அவசியமில்லை என்றும் இந்திய சமஷ்டிமுறை உருப்படியானமாநில சுயாட்சி அமைப்பு அல்லவென்றும் திரு. தொண்டமான் பத்திரிகைப் பேட்டிகளில் குறிப்பிட்டதும் இந்திய அரசுக்கு சினத்தை ஏற்படுத்தியிருக்கலாம். எனினும் திரு. தொண்டமான் ஒரு சக்திவாய்ந்த அரசியல்வாதி என்பதாலும், மலையகத்தமிழரின் மதிப்புமிக்க தலைவர் என்பதாலும் அவருடன்முரண்படவோ அல்லது பகைத்துக் கொள்ளவோ இந்திய அரசு விரும்பப்போவதில்லை. ஆதலால் தனது அதிருப்தியை ராஜதந்திரப் பண்புடன் மௌனத்திரைக்குள் மறைத்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளுக்கு எழுதியபடி திரு. தொண்டமான் கொழும்பில் சிங்கள அரசியல் தலைவர்களை சந்தித்துப் பேசி ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். சகல தரப்பினருடனும் கதைத்து அவர்களது கருத்தைக்கேட்டு, அவற்றின் அடிப்படையிலேயே ஒரு தீர்வுத் திட்டத்தை வகுத்துள்ளதாக திரு. தொண்டமான் எமக்கு அறிவித்தார்.

## பிரபாகரனுக்கு தொண்டா கடிதம்

டிசம்பர் 10 ஆம் திகதி திரு. தொண்டமான் தனது தீர்வுத் திட்டத்தை எமக்கு அனுப்பி வைத்தார். இந்த தீர்வுத்திட்டத்தின் பிரதிகள் எமது இயக்கத் தலைவர் திரு பிரபாகரனுக்கும், பிரதித் தலைவர் திரு. மகேந்திரராசாவுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்தை ஜனாதிபதிக்கும், பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கும் சமர்ப்பித்திருப்பதாகவும் திரு. தொண்டமான் எமக்கு அறியத்தந்தார்.

10-12-1991 இல் தனது தீர்வுத்திட்டத்தோடு தலைவர் பிரபாகரனுக்கு திரு. தொண்டமான் அனுப்பி வைத்த கடிதத்தில்,

''நான் மாண்புமிகு ஜனாதிபதியுடனும், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும், வேறு கட்சித் தலைவர்களுடனும்நடத்தியபேச்சுவார்த்தைகளின் அடிப்படையில்ஒரு திட்டத்தை வகுத்துள்ளேன். இத்திட்டம் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யவும், சமாதானத்திற்கு ஏதுவாகிய சூழ்நிலையை ஏற்படுத்தவும் உதவி செய்யும் என்பது எனதுநம்பிக்கை. இத்திட்டத்தையே நான் இன்று பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன். அதனை மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும் இன்று கையளித்துள்ளேன். இத்திட்டத்தை உங்களுக்கு அனுப்பி வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எம்மிடையே நேரடிச் சந்திப்பொன்றை நான் எதிர்பார்க்கிறேன். அச்சந்திப்பின்போது அரசியல் தீர்வுக்கு வேண்டிய நிலைப்பாடுகளை ஆராய்வது அவசியமாகும். அத்தோடு செயல்முறைக்கு உதவக் கூடிய திட்டமொன்றையும்முழுமையாக உருவாக்குதல் வேண்டும்.

போரற்றசூழ்நிலையை ஏற்படுத்துதல், பொருளாதாரத்தடையை நீக்குதல் ஆகிய யோசனைகள் வேறாக ஆராயப்படும். அதே சமயத்தில் தமிழ்மக்களின் இக்கட்டான நிலைமைக்கு மூல காரணியாகிய அரசியல் பிரச்சினையை ஆராய்வது அதிமுக்கியமாகும். நிரந்தரத் தீர்வுக்கு ஏற்ற அணுகுமுறைகளை வகுத்தலும் அத்தியாவசியம். எமது சந்திப்புக்கு முன்னதாகவே உங்களது யோசனைகளைப் பரிமாறுவது வரவேற்கத் தக்கதாகும்.

எமது சமாதான முயற்சி கைகூடும் என்ற நல்லெண்ணத்தோடு இக்கடிதத்தை அனுப்புகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

திரு. தொண்டமான் அனுப்பி வைத்த தீர்வுத்திட்டத்தை எமதுதலைமைப்பீடம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. அதேசமயம் நாம் உள்ளூர் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி திரு. தொண்டமானின் தீர்வுத்திட்டத்தை பொதுமக்களின் பரிசீலனைக்காகவும் விவாதத்திற்காகவும் பகிங்கரப்படுத்தினோம். இதேபோல திரு. தொண்டமானும்கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தனது திட்டத்தை வெளியிட்டார்.

இத்தீர்வுத்திட்டத்தைஎமது இயக்கம் ஆர்வத்துடன் பரிசீலனை செய்வதாகத் தெரிவித்து திரு மகேந்திரராசா திரு. தொண்டமானுக்கு ஒரு பதிலை அனுப்பி வைத்தார். இத்தீர்வுத் திட்டம் பற்றி நேரில் கலந்துரையாட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார்.

20-12-91 இல் திரு. மகேந்திரராசா அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில்

''உங்களது 10.12.1991 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. தேசியப் பிரச்சினை சம்பந்தமாக நீங்கள் அனுப்பி வைத்த தீர்வுத் திட்டத்தையும் பெற்றுக் கொண்டோம். மிகவும் நன்றி. உங்களது தீர்வுத் திட்டத்தை எமது இயக்கம் மிகவும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் பரிசீலனை செய்து வருகிறது.

நீங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தைப்பொங்கலோடு உங்களை யாழ்ப்பாணத்தில் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

உங்கள் தீர்வுத் திட்டம் பற்றி நேரில் கலந்துரையாடுவோம்'' என்று குறிப்பிட்டார்.

(தொடரும்)

## விசாரணை துரிதப்படுத்த பிரிட்டனில் சட்டம்

(லண்டன்)

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி மனுச்செய்பவர்களின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் காலத்தைத் துரிதப்படுத்த வழிவகை செய்யும் புதிய சட்டம் பிரிட்டன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டம் பிரபுக்கள் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டவாக்கத்தைக் கண்டித்துள்ள எதிர்க் கட்சியான தொழிற் கட்சி, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பெருந்தொகையான அகதிகள் பிரிட்டனிலிருந்து தத்தம் தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளது.

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புனித பரியோவான் முதலுதவிப் படையில் இருபது ஆண்டுக்காலம் தொடர்ந்துசேவையாற்றிய ஐக்கிய வலிகாமம் வடக்குபிரதேச அத்தியட்சகர் க. அருந்தவராசாவின் சேவையைப் பாராட்டு முகமாக விழாவொன்று எதிர்வரும் ஞாயிறன்று நடைபெறவுள்ளது துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஞாயிறன்று பிற்பகல் இரண்டு மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இவ் விழா நடைபெறவுள்ளது.

# தோட்டப்பகுதியில் புலிகள்; தொண்டமானே காரணம்

**- தினேஷ் குணவர்தனா**

(கொழும்பு)

தோட்டப் பகுதிகளில் தற்பொழுது நடைபெறும் சம்பவங்கள் தொண்டமானுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தமொன்று இருப்பதை வெளிக்காட்டுகின்றன என மக்கள் கட்சித் தலைவர் தினேஷ்குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் தொண்டமான் தோட்டப்பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். இது புலிகள் தமது நடவடிக்கைகளை அந்த பகுதிகளில் தடையின்றி மேற்கொள்ள உதவியாக இருக்கிறது.

நாட்டின் தென்பகுதியில் கைது செய்யப்படுவோர் பல்வேறு அவசரகாலச் சட்டங்களின் கீழ் விசாரணைக்காக தடுத்து வைக்கப்படுகின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள் கூட பல மாதங்களாக விசாரணையின்றி தடுத்துவைக்கப்படுகின்றனர்.

இந்த விடயங்கள் நாட்டில் இரண்டு வகையான சட்டங்கள் பின்பற்றப்படுவதை வெளிப்படுத்துகிறது. நாட்டின் சாதாரண மக்களுக்காக ஒரு சட்டமும் பல பிரச்சினைகள் உருவாக காரணமாக உள்ளதொண்டமானின்தோட்டத் தொழிலாளர்களுக்காக இன்னுமொருசட்டமும் செயல்படுகின்றன.

இதனாலேயே ஊவாபகுதியில்பல பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

## மாணவர் கல்வி கற்க மின்சாரம் வழங்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் இரவுவேளைகளில் கல்வி கற்பதற்கு வசதியாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் தினமும் மூன்று மணி நேரம் உபகருவி மூலம் மின்சாரம்வழங்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் செயலாளர் சிவானந்தராசா தெரிவித்தார்.

முதலில்நாளை சனிக்கிழமை இரவு 6.30 மணிமுதல் 9.30 மணிவரை பரீட்சார்த்தமாகக் கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரியில் செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய் பிரிவின் மேற்பார்வையில் இதனை அமுல் நடத்தப்படவுள்ளதாகவும் இதற்கு கல்லூரி அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் விரைவில் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பூசா தமிழ் இளைஞர்கள் பல்லேகலைக்கு மாற்றம்

(கொழும்பு)

பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் பல்லேகல தடைமுகாமிற்கு மாற்றப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானத்தை ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர்மா நாட்டில் எடுத்ததாகவும், தெரிவிக்கப்படுகிறது.

தடுப்புக் காவலில் உள்ள இளைஞர்களை அவர்களது பெற்றோர்கள் சென்று பார்வையிடுவதற்கு வசதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

## பதுளையில் கைதாகிய 41 தமிழர் பூஸாவிற்கு

(பதுளை)

பதுளையில் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் 41பேர் பூசா முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களென சந்தேகத்தின்பேரில் கைது செய்து பதுளை பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் மூவர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் 41 பேர் காலி பூஸா முகாமிற்கு அனுப்பப்பட்டனர் என்றும் ஒன்பது பேர் தொடர்ந்தும் பதுளையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தொழிற்சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை பதுளை ஸ்பிரிங்வெளிப் பகுதித் தோட்டங்களில் மீண்டும் தேடுதல் நடவடிக்கைகள் சுற்றிவளைப்புகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### வவுனியாவில்

கள் பலத்த சேதமடைந்துள்ளன. ஈச்சங்குளப் பகுதி மக்கள் இக் குண்டு வீச்சையடுத்து இடம் பெயர்ந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஈஸ்வரி இராஜகுலசிங்கம்

திருமதி ஈஸ்வரி இராஜகுலசிங்கம் 22-01-92 இல் காலமானார். இவர் இராஜகுலசிங்கம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா) அவர்களின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரன் (நீர்ப்பாசன இலாகா பதுளை), இராஜேஸ்வரி, இராசமலர், கணேஸ்வரன் (மோகன்), சிவராசமனோகரன் (சிவா), நிஷானந்தன் (சதீஸ்), ஆகியோரின் அன்புத்தாயாரும், வே. சிவநேசன், கீதாசெல்வரமணி ஆகியோரின் மாமியாரும், சுராஷ், சுமித்திரா, நித்திலா, சுலக்ஷி, அபிரூபன், முரளிகாந், பிரியதர்சினி ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்:
வே. சிவநேசன்

[சி/3840]

### திருமதி சிவகாமசுந்தரி நன்னித்தம்பி (சாத்திரம்மா)

இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சாத்திரம்மா என அழைக்கப்படும் சிவகாமசுந்தரி அவர்கள் 23-01-92 (நேற்று) காலை 9.00 மணிக்கு சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 23-01-92 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காரைக்கால் மயானத்தில் மாலை 5.00 மணிக்கு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

[2138]

### குருநகர்

குமார் (வயது 40) என்பவர் துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியில் கடலில் நீந்திக் கரைவந்து சேர்ந்தார். இருவரும் சென்ற வள்ளமும், வலைகளும் இராணுவத்திடம் சிக்கிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

குலசிங்கம் ஹன்யூஸையும், தொழில் உபகரணங்களையும் மீட்டுத்தரும்படி தொழில் உரிமையாளர் பெனடிக்ற் ஆசைப்பிள்ளையால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ். அரச அதிபர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவருடன் சமீப காலத்தில் குடாக்கடல் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யபபட்டிருக்கும்மீனவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது. (21)

### இராணுவத்

ளார்கள் எனத் தப்புக்கணக்குப்போட்டிருந்த இராணுவத்தரப்பினருக்கு மாறிமாறித் தொடர்ச்சியாக நடந்த இத்தாக்குதல்கள் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

இந்நிலையில் சிறிலங்காவின் மிகப்பெரிய விமானப் படைத்தளமான சீனன்குடாவில் பாரிய குண்டு வெடிப்பால் ஏற்பட்ட பேரழிவும் சிங்கள அரசுக்குப் பெரியதொரு பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. போர் விமானங்களும், பலகோடி ரூபா பெறுமதியான வெடிமருந்துகளும் விமானப்படையின் செயற்பாட்டைச் சீர்குலைத்துள்ளது. விமானஓட்டிகள், பொறியியலாளர்கள் பலர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும் இருப்பதால் விமானப் படையின் முழுமையான பலத்துடன் பெரும் இராணுவத் தாக்குதல்களை மேற்கொள்வதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. திடீரென உருவாகியுள்ள இந்த நெருக்கடிச் சூழ்நிலை காரணமாக அரசு மட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

### படையெடுப்பு

சமாதானத்திற்கான கதவுகள் மூடப்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

தென்னிலங்கையில் விடுதலைப் புலிகள் பற்றிய கணிப்பீடும் தப்பபிப் பிராயமும் நிலவுவதாக நல்லெண்ணத் தூதுக்குழுவினர்தெரிவித்தனர் இது குறித்து விளக்கமளித்த விடுதலைப்புலிகள்,அவைஅரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் மேற்கொள்ளும் விசமத்தனமான பிரசாரம் எனவும் விடுதலைப் புலிகளின் சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டையும் விளக்கிக் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேச்சு நடாத்தியுள்ள இவ் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையினையும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும் தென்னிலங்கையில் அரசியல் வாதிகளுக்கும், மக்களுக்கும் தெரிவிக்கவுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

### சீனன்குடா

லேயே இதனைத் தெரிவித்தார். இந்த விபத்து 'பயங்கரவாத' செயல்களால் ஏற்படவில்லை என்றும் தற்செயலாகத்தான் இடம்பெற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இடங்களுக்கு தான் நேரில் விஜயம் செய்து அங்கு பார்வையிட்டதன் பின்னரே இதனைத் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த குண்டுவெடிப்பினால் ஒன்பது பேர் மரணமடைந்துள்ளனர் என்றும்,பதினைந்து பேரைக் காணவில்லை என்றும் பதினான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் 120 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் டி. பி. விஜயதுங்கா தமதுரையில் தெரிவித்தார்.

### பிரபாவும்

கால சட்டநீடிப்பு சம்பந்தமான விவாதத்தில் அவைக்கு தலைமை தாங்கிய காமினி பொன்சேகா மேலும் பேசுகையில் அமைச்சர் தொண்டமானின் யோசனைக்கு எதிராக வீதியில் இறங்குவோம் என முக்கிய எதிர்க்கட்சியினர் கூறுகிறார்கள். அது முறையற்றது எவ்வித யோசனைகளையும் சமாதானத்திற்காக முன்வைக்க இந்நாட்டுப் பிரஜை எவருக்கும் உரிமையுண்டு எனவும் அவர் விபரித்தார்.

### யாழ்ப்பாணம்

னார். அவர் மேலும் குறிப்பிடுகையில்குடாநாட்டிலுள்ள மக்களை தீவுப்பகுதிகளுக்கோ அல்லது வேறிடங்களுக்கோ விலகிச் சென்று விடுமாறு ஆலோசனை கூறும் துண்டுப் பிரசுரங்கள் விமானம் மூலம் விநியோகிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்நடவடிக்கை இராணுவத் தாக்குதலுக்கான முன்னறிவிப்பா என்று செய்தியாளர்கள் கேட்டபோது அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதை அரசு விரும்பவில்லை என்று மட்டும் பதிலளித்தார்.

## எறிகணை தாக்கு

காரைநகர்ப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி எறிகணை தாக்குதலை மேற்கொண்டனர்.

தொடர்ச்சியாக ஏவப்பட்ட மூன்று எறிகணைகள் பொன்னாலை கிருஷ்ணர் கோயில் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. ஆயினும் இதனால் எதுவித சேதமும் ஏற்படவில்லை என தெரியவருகிறது (ச)

## அறிவியற் கருத்தரங்கு

பாடசாலை மாணவர்களிடையே அறிவியல் கருத்தரங்குகளை விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கடந்த சிலநாட்களாக நடாத்தி வருகின்றது.

இதன் வரிசையில் இன்று நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு சுளிபுரம் விக்ரோறியா கல்லூரியில் செய்மதி பற்றி யாழ் பல்கலைக் கழக புவியியல்துறை தலைவர் செ. பாலச்சந்திரன் உரையாற்றுகிறார். மாதகல் சென். யோசெப் மகா வித்தியாலயத்தில் நண்பகல் 1.30றக்கு பிரபஞ்சத்தின் அமைப்பு பூமியின் தோற்றம் வளர்ச்சி பற்றி யாழ் பல்கலைக் கழக புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளரி. பி. இராஜேஸ்வரன் உரைநிகழ்த்தும் அதேநேரம் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் குடாநாட்டில் நன்னீர் வளம்பற்றி யாழ் வளாக புவியியல்துறை தலைவர் செ. பாலச்சந்திரன் உரைநிகழ்த்துவார்.

எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் ஒருமணிக்கு அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் அபிவிருத்தியும் குடியேற்றமும் பற்றி விரிவுரையாளர் இரா. சிவச்சந்திரனும் அராலி இந்துக் கல்லூரியில் ஐரோப்பியர் வருகையும் காலனி ஆதிக்கமும் பற்றிசத்தியசீலனும் உரைநிகழ்த்தவுள்ளனர்.

### தற்காலிக

கொக்குவில் கொத்தணியினருக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், கோண்டாவில் கொத்தணியினருக்கு கோண்டாவில் இராமகிருஷ்ணர் மத்திய வித்தியாலயத்திலும், யாழ். நகரக் கொத்தணி யாழ். மத்திய கல்லூரியிலும், நல்லூர் கொத்தணி கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயத்திலும்,வண்.தெற்கு கொத்தணி வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், யாழ். நகர தெற்கு கொத்தணியினருக்கு சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### புத்தளத்தில்

யளித்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து பிரேமதாசாவைச் சந்தித்த கத்தோலிக்க ஆயர் குழுவிடம் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும் விடுமுறை விடுதி ஒன்றை அப் பகுதியில் அமைப்பது பல சீர்கேடுகளுக்கு வழிவகுக்கும் என்றும் கத்தோலிக்க ஆயர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கத்தோலிக்க திருச்சபை எதிர்த்த போதிலும் அஞ்சல் நிலையம் அமைக்கும் வேலைகள் இந்த ஆண்டு தொடங்கும் என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக தெரியவருகிறது.

அமெரிக்க வானொலி அஞ்சல் நிலையம் அமைக்கப்படுவதற்கென 1500 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்படவுள்ளதும் இதனால் இப் பகுதியில் வாழும் 300 கத்தோலிக்க குடும்பங்கள் வெளியேற்றப்பட உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.